பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 24 புதன்கிழமை (09.01.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 44

# ஜா-எல வீதியோரக் குண்டுவெடிப்பில் அமைச்சர் தஸநாயக்கா பலியானார்

## சாரதி, காவலரும் மரணம்; 10பேர் காயம்



கொழும்பு,ஜனவரி 9

தலைநகர் கொழும்புக்கு வெளியே - ஜா-எலவில் - வீதியோரத்தில் இலக்கு வைத்து நடத்தப்பட்ட கிளைமோர்க் குண்டுத் தாக்குதலில் தேச நிர்மாண அமைச்சர் டி.எம். தஸநாயக்காவின் (வயது - 54) வாகனம் சிக்கியதில் அவர் படுகாயமடைந்து, பின்னர் உயிரிழந்தார். அவரது வாகனச் சாரதியும் மெய்ப்பாதுகாவலர் ஒருவரும் இச்சம்பவத்தில் பலியானார்கள். பொதுமக்கள் உட்படப் பத்துப்பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதுவருடத்தின் பின்னர் நேற்று முதல் தடவையாகக் கூடிய நாடாளுமன்றத்தின் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு நோக்கி அமைச்சர் வந்து கொண்டிருந்தபோதே காலை 10.38 மணியளவில், கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதியில், ஜா - எலப் பகுதியில், முன்னாள் சிங்கள நடிகை ருக்மணி தேவியின் சிலைக்கு அண்மித்த பகுதியில் அவரின் வாகனம் இந்த அனர்த்தத்தில் சிக்கியது.

அமைச்சர் தஸநாயக்காவின் வாகன அணியில் அமைச்சர் பயணித்துக் கொண்டிருந்த வெள்ளை நிற டொயாட்டோ லாண்ட் குரூஸர் வாகனமே மேற்படி கிளைமோருக்கு பிரதான இலக்காகச் சிக்கியது.

படுகாயமடைந்த அமைச்சரும், வாகனத்தில் இருந்த ஏனையோரும், அப்பகுதியில் காயமடைந்த ஏனைய பொதுமக்களும் உடனடியாக றாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அமைச்சர் தஸநாயக்காவும் அவரது சாரதியும், மெய்ப்பாதுகாவலர்களுள் ஒருவரும் தங்களது காயங்கள் காரணமாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால நிலை மேலும் நீடிப்பு

கொழும்பு,ஜன.9

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 8 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 103 வாக்குகளும்

(11ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார், முகமாலையில் நேற்றும் மோதல்கள்

கொழும்பு,ஜன.9

மன்னார் முன்னரங்க நிலைகளில் விடுதலைப் புலிகளுக்கும் ராணுவத்தினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

மன்னார் முள்ளிக்குளம் பகுதியில் இராணுவத்தினரின் நிலைகளுக்குள் ஊடுருவ

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி கண்டனம்

கொழும்பு,ஜன.9

பயங்கரவாதத்தை ஒழிக்கும் அரசின் வேலைத் திட்டத்தை படுகொலைகள் மூலம் தடுக்கமுடியாது. இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தஸநாயக்காவின் படுகொலையைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையிலேயே ஜனாதிபதி இப்படித் தெரிவித்துள்ளார். அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

ஜனநாயக அரசியலில் ஈடுபட்டுள்ள தலைவர்களை புலிகள் இயக்கம் படுகொலை செய்கிறது. அதன் மூலம் அவ்வியக்கத்தினது மிலேச்சத்தனம் தெளிவாகத் தெரிகிறது. இவ்வாறான செயல்கள் மூலம் இனங்களுக்கு இடையிலான நல்லுறவை சீர்குலைக்க புலிகள் முற்படுகின்றார்கள். ஜனநாகத்துக்காக எந்தவொரு சமாதான வழியையும் புலிகள் இயக்கம் பின்பற்றப் போவதில்லை. அதை அவர்கள் ஒருபோதும் மதிக்கப்போவதுமில்லை. (2)

# மகேஸ்வரன் கொலைக்கு நாடாளுமன்றில் எதிர்க்கட்சிகள் ஒரே குரலில் கண்டனம்

## ஐ.தே.க. உறுப்பினர்கள் எதிர்ப்புப் போராட்டம்

கொழும்பு, ஜன.9

'ஜனாதிபதியின் 'மஹிந்த சிந்தனை' மகேஸ்வரனைக் கொன்றுவிட்டது. மகேஸ்வரனின் பாதுகாப்பு குறைக்கப்பட்டதாலேயே அவர் கொல்லப்பட்டார். மகேஸ்வரனின் படுகொலைக்கு அரசு பதில் கூறியே ஆக வேண்டும்.' - என நேற்று நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒரே குரலில் தமது கண்டனத்தைத் தெரிவித்தன.

மகேஸ்வரனின் படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஐ.தே.க. உறுப்பினர்கள் அனைவரும் கறுப்புப்பட்டிகளை அணிந்து சபைக்கு வந்தனர்.

அதேவேளை, மகேஸ்வரனின் படுகொலையைக் கண்டிக்கும் பெரிய பதாகைகளையும், போஸ்டர்களையும் உயர்த்திப் பிடித்த வண்ணம் சபைக்குள் அமைதியான எதிர்ப்புப் போராட்டம் ஒன்றையும் அவர்கள் முன்னெடுத்தனர்.

எதிர்க்கட்சியினர் ஏதாவது எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தினால் ஆளும் கட்சியினர் வழமையாக அதனைக் குழப்பியடித்துப் பெரிதாக ஆர்ப்பாட்டம் செய்து சபையை இரண்டாக்கி ரணகளமாக்கி விடுவர்.

ஆனால் நேற்றுப் பிரதமர் உட்பட ஆளும் தரப்பு உறுப்பினர்கள் எதிர்க்கட்சியினரின் கண்டனக் கூற்றுக்களை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)



# கொழும்பு கோட்டையின் கேந்திரப் பகுதியில் லேக்ஹவுஸ் முன்பாக இரவில் குண்டுவெடிப்பு!

கொழும்பு, ஜன.9

தலைநகர் கொழும்பின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமான கோட்டையில் - லேக்கவுஸ் பகுதியில் - நேற்றிரவு 7.50 மணியளவில் குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

அதி உச்ச பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்ட இப்பகுதியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பொதுமக்களுக்கோ பாதுகாப்புத் தரப்பினருக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று முற்கொண்டு அறிவிக்கப்பட்டது.

'ரீயன்ட்' தொடர் மாடியில் உள்ள மாடி ஒன்றில் அமைந்த தொலைபேசிக் கூண்டு (Telephone Booth) இற்குள் இக்குண்டு வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

குண்டுவெடிப்பினால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட இருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இச்செய்தி எழுதப்படும் வரை குண்டுவெடிப்பினால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய மேலதிக விவரங்கள் எதுவும் தெரியவரவில்லை.

குண்டுவெடிப்பு இடம்பெற்ற தொலைபேசிக் கூண்டு சிதைவடைந்த நிலையில் காணப்படுகின்றது. அப்பகுதியில் சிறியளவிலான சேதங்கள் ஏற்பட்டுள்ளன. சம்பவம்

(11ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதத்தை ஒழிக்கும் ஒரு கட்டமாகவே போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகினோம்

## புலிகளை தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்கமுடியாது

கொழும்பு,ஜன.9

பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து அரசு விலகியுள்ளது. ஒரு தலைப்பட்சமாக அந்த ஒப்பந்தத்தைப் பேணுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒருமாதத்திற்கு நீடிக்கும் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து பேசுகையில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இப்படித் தெரிவித்தார் அவர் அப்போது மேலும் கூறியதாவது:-

சமாதானப் பேச்சுக்கு நாம் என்றும் தயாராகவே உள்ளோம். ஆனால், அதற்காகப் புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக நாம் ஏற்க முடியாது.

ஜனநாயக ரீதியாகத் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் பேச நாம் என்றும் தயாராகவுள்ளோம். (12ஆம் பக்கம் பார்க்க)



# ஐ.தே. கட்சியின் இரு எம்.பிக்கள் அரசின் கொலைப் பட்டியலிலாம்!

### அவர்களில் ஒருவர் நேற்றுச் சபையில் தகவல்

கொழும்பு, ஜன.9

அரசு தரப்பில் மேற்கொள்ளப்பட்டு வருபவை எனக் கூறப்படும் ஊழல் மோசடிகளை நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் அம்பலப்படுத்தி வருகின்ற எதிர்க்கட்சி எம்.பிக்களை கொலைசெய்வதற்கு அரச உயர் மட்டத்தில் திட்டம் தீட்டப்பட்டுள்ளது என்றும், அந்த வகையில் ஐ.தே.கட்சி எம்.பிக்களான தன்னுடையதும் ஜோண்ஸ்டன் பெர்னாண்டோவின்தும் பெயர்கள் அரசின் கொலைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் ஐ.தே. கட்சி எம்.பி லஷ்மன் செனவிரட்ன நேற்று நாடாளுமன்றில் கூறினார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 2007 A/L பரீட்சையில்

## சிறந்த பெறுபேறு பெற்ற மாணவச்செல்வங்களை வாழ்த்துகிறோம்

| கலை | |
|---|---|
| 01. த். பாஸ்கரன் | 3A |
| 02. வி. ஜனகன் | 2AB |
| 03. செ. பிரதாப் | 2AB |
| 04. அ. லவாணி | 2AB |
| 05. கு. மகிலதா | 2AB |
| 06. ச. ஜனந்தன் | A2B |
| 07. த. நிதர்சன் | A2B |
| 08. மு. சுகந்தினி | A2B |
| 09. த. ஜியுத்தாடெபின் | ABC |
| 10. செ. சிந்து | ABC |
| 11. க. துஸ்சிந்தன் | ACS |
| 12. வி. அனித்தா | ACS |
| 13. ஜெ. கஸ்தூரன் | 3B |
| 14. மு. சிவசுதன் | 3B |
| 15. நி. பிறேம்நிசாந்தன் | 3B |
| 16. ஜெ. நதஸ் | 3B |
| 17. க. திலீபன் | 3B |

| கணித விஞ்ஞானத்துறை | |
|---|---|
| பா. கோபி | A2B |
| | (மாவட்ட நிலை 32) |
| வே. மீரா | 3C |

சிறந்த பெறுபேறு பெற உழைத்த ஆசிரியர்களுக்கும் கல்லூரியின் மறுமலர்ச்சிக்கு அயராது பாடுபடும் அதிபருக்கும் எமது இனிய நன்றியும் வாழ்த்துக்களும் உரித்தாகுக. இன்ரநெற் மூலம் இப்பெறுபேறுகளை கண்டு மகிழ்ந்தோம்.

அமிர்தலிங்கம் றெஜிந்தன்
ஸ்கந்தா பழைய மாணவன்,
ஆஸ்திரேலியா.

(69933)



# கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி - மல்லாகம் ப.நோ. கூ. சங்கப் பணியாளர்

க. சிவகுமார் அவர்களின் அன்புத் தந்தை

## சின்னக்குட்டி கந்தையா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி - மல்லாகம் ப.நோ.கூ. சங்க ஊழியர் நலன்புரிச் சங்கம்.

(சி/551010)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பொன்னையா

மீசாலை வடக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னையா நேற்று (08.01.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பூரணத்தின் அன்புக் கணவரும், பொன்னம்பலம், ஐயாத்துரை, சின்னத்துரை, சுப்பிரமணியம், வல்லிபுரம், கணபதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் திலகவதி, ராதாகிருஸ்ணன், கோடீஸ்வரன், குணமணி, பாலகிருஸ்ணன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் குலேந்திரன், சந்திரகலா(ஆசிரியை, சாவ. இந்துக் கல்லூரி) விக்கினேஸ்வரி, பேரின்பநாதன், சைலயா (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2008) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(சி/551013)

## சின்னையா சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய அதிபர், தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், முகாமையாளர், தும்பளை தம்புருவளைச் சித்திவிநாயகர் ஆலயம்)

தும்பளையைச் சேர்ந்த சின்னையா சிவஞானசுந்தரம் நேற்று (08.01.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - இராசம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் ருக்மணியின் அன்புக் கணவரும் சந்திரவதனா, காலஞ்சென்ற சிவசந்திரன், சறோஜா (எழுதுவினைஞர். காணிப்பதிவகம், பருத்தித்துறை), சிவகணேசன் (ஹாட்லிக் கல்லூரி), சத்தியரஞ்சினி, சுகுணலினி (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பருத்தித்துறை), சிவசங்கர்(நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், யாழ்.மாநகர சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இரவீந்திரன்(கிராம உத்தியோகத்தர், புலோலி வடக்கு), சுபத்திரா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை), காலஞ்சென்ற விஜயரட்ணம், வசந்தகுமாரி(துன்னாலை காசிநாதன் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும் யோகேஸ்வரன் (கட்டார்), ஞானேந்திரன், கேதீஸ்வரன், யோகச்சந்திரன், அரவிந், டினோஜன், அனுஷா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற செல்வநாயகத்தின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி, திருநாவுக்கரசு, யோகமலர், அபிடேக அம்பிகை அம்மா ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற அருட்செல்வம், திருச்செல்வம் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2008) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் கோரியடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திகிரி,
தும்பளை, பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்

# சமாதானம் வேண்டி திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜன.9

நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் நிலவ வேண்டி நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயத்தில் இன்று புதன்கிழமை காலை 7 மணிமுதல் திருவாசக முற்றோதல் இடம்பெறும். (202)

# சாரணத் தலைவர்களின் விசேட கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.9

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச் சங்கத்தின் ஏற்பாட்டில் சாரணத் தலைவர்களுக்கான விசேட கூட்டம் இன்று கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

விருது வழங்கல் நிகழ்வு, சாரணர் மதிப்பீடு, பெண் சாரணர் இயக்கம் ஆரம்பித்தல் ஆகிய விடயங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றன என்று மாவட்டச் சாரணர் ஆணையாளர் தெரிவித்தார். (1)

# நேர்முகப்பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.9

இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் நம்பிக்கையை உருவாக்குதல் மற்றும் ஸ்திரமான நடவடிக்கைக்கான திட்டத்தின் இணைப்பாளர், உதவி இணைப்பாளர் பதவிகளுக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கென நாளை நடைபெறவிருந்த நேர்முகப்பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி இத்தகவலைத் தெரிவித்தார்.

விண்ணப்பதாரிகளுக்கு புதிய திகதி அறிவிக்கப்படும். (1-202)

# சங்கானையில் நேற்றுத் தேடுதல்

சங்கானை,ஜன.9

சங்கானை ஓடக்கரை வீதி, தேவாலய வீதி ஆகியன நேற்று அதிகாலை 5 மணி முதல் 10 மணிவரை பாதுகாப்புப் படையினரால் சுற்றிவளைத்துத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

அப்பகுதி மக்களை சங்கானை செலேசியர் தேவாலயத்திற்கு வருமாறு அழைத்து ஒவ்வொருவரினதும் அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்டுள்ளன. எனினும் எவரும் கைது செய்யப்பட்டதாகத் தகவல் இல்லை. (1-29)

# தீயணைப்பு சேவை புதிய தொலைபேசி 021-222-8888

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.மாநகர சபைத் தீயணைப்புச் சேவையினரின் தொலைபேசி இலக்கம் மாற்றப்பட்டுள்ளது என்று மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

புதிய தொலைபேசி இலக்கம் 021 222 8888 என்பதாகும். (அ-2)

# மட்டக்களப்பில் ஜே.வி.பி. போட்டியிடாது

கொழும்பு, ஜன.9

மட்டக்களப்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று ஜே.வி.பி அறிவித்துள்ளது. எனினும் பயங்கரவாதத்துக்கும் வன்முறைக்கும் எதிரான சக்திகளுக்கு வாக்களியுங்கள் என்று அது மக்களைக் கேட்டுள்ளது.

கிழக்குப் பிரதேசத்தில் ஜே.வி.பியினால் செயற்திறன் மிக்க அரசியலை முன்னெடுக்க முடியாது. அதனாலேயே அங்கு போட்டியிடப் போவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டதாக ஜே.வி.பி.யின் பிரமுகர்களில் ஒருவரான விஜித ஹேரத் எம்.பி தெரிவித்தார். (அ- 2)


## விற்பனைக்கு

புறோயிலர் கோழி உயிர்(3Kg), 1Kg 420 ரூபாவுக்கும் சுத்தம் செய்யப்பட்ட புறோயிலர் 1Kg 600 ரூபாவுக்கும் மற்றும் ஊர்கோழி, கல்பேட் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: தாசன் பாம், 158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## மிசின் தேவை

கமடா ஒவ்செற் (OFFSET), டேவிசன் (A3,A4,LEGAL) மிசின் விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

ஒவ்செற் மிசின் பிறிண்டிங் வேலை பழகவிரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.



# அங்கத்தவர்களுக்கான அறிவித்தல்

கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்டு மணல் ஏற்றுவதற்கு அனுமதி கிடைக்கப்பெற்ற உழவு இயந்திரம், கன்ரர் வாகன உரிமையாளர்களுக்கு மட்டும்.

மேற்படி சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு இன்று (09.01.2008) புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அல்வாய் கிழக்கு (மாலு சந்தி, வியாபாரிமூலை வீதியில் உள்ள) குமிழடிப்பிள்ளையார் ஆலய மண்டபத்தில் மணல் ஏற்றுவது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற இருப்பதனால் அனைத்து அங்கத்தவர்களையும் சமுகம் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தொ.பே.இல.
021 2263011.

(69936)

நிர்வாகம்,
வடமராட்சி மணலேற்றும்
வாகன உரிமையாளர் சங்கம்.


# அரசாங்க அறிவித்தல்

யாழ்.மாவட்ட செயலகம்

## வாகனங்கள் சேவிஸ் செய்வதற்கான கேள்வி - 2008

யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள கீழ் குறிப்பிடப்படும் வாகனங்களை சேவிஸ் செய்வதற்கான கேள்வி கோரப்படுகின்றது. இது தொடர்பான நிபந்தனைகளையும் விண்ணப்பப்படிவத்தினையும் மாவட்டச் செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 3.15 மணிவரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 100 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை, ***தலைவர், மாவட்டச் செயலக கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்*** என விலாசமிட்டு, கடிதத்தின் இடது பக்க மேல் மூலையில் ***வாகனங்கள் சேவிஸ் செய்வ தற்கான கேள்வி விண்ணப்பம் - 2008*** எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகக் கேள்விப் பெட்டியில் நேரடியாகவோ 2008.02.05 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பவேண்டும். அன்றைய தினம் பி.ப 3.00 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும். அச்சமயம் விண்ணப்பதாரரோ அல்லது அவரது பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

**வாகனங்கள் விவரம்.**

- ★ பிக்கப்
- ★ வான்
- ★ கார்
- ★ மோட்டார் சைக்கிள்
- ★ லொறி
- ★ முச்சக்கர வண்டி (AUTO)
- ★ ஜீப்

க. கணேஸ்,
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி/551004)

# அரசாங்க அறிவித்தல்

## யாழ்.மாவட்ட செயலகம்

## 2008 ஆம் ஆண்டிற்கான பொருள்கள், சேவைகள் வழங்குநர்களை பதிவு செய்தல்

(அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் உட்பட)

யாழ்.மாவட்ட செயலகத்திற்கு பின்வரும் பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் தனியாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 3.45 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 05.02.2008 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு ***அரசாங்க அதிபர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்*** எனும் விலாசமிட்டு தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் பொருள்கள், சேவைகள் வழங்குநர்களை பதிவு செய்தல்-2008 எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

1. கணனி, நிழற்படப்பிரதி இயந்திரம், தட்டச்சு இயந்திரம், பக்ஸ் இயந்திரம் என்பன வழங்குதல், அவற்றின் உதிரிப்பாகங்கள் வழங்குதல் மற்றும் அவற்றை திருத்தம் செய்தல்.
2. மோட்டார் வாகனங்களுக்குரிய உதிரிப்பாகங்கள் வழங்கல் மற்றும் அவற்றை திருத்தம் செய்தல்.
3. காகிதாதிகள், எழுது பொருள்கள் வழங்குதல்.
4. பாவனைப் பொருள்கள் (ஈர்க்கில் தடி, தும்புத்தடி, சவர்க்காரம், விம், காப்பிக், பைனோல், குளோரின் முதலியன) வழங்குதல்.
5. வாகன திருத்த வேலைகள்.
6. மரத்தளபாடங்கள் வழங்குதலும் திருத்தமும்.
7. உருக்குத் தளபாடங்கள் வழங்குதலும் திருத்தமும்.
8. கட்டடம் திருத்தம் செய்தல், திருத்தத்திற்குரிய பொருள்களை வழங்கல்.
9. பீங்கான் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்கள் என்பவற்றை வழங்கல்.
10. மின் உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் வழங்கலும், திருத்தலும்.
11. மின்னிணைப்பு திருத்த வேலைகள்.
12. நீர் வழங்கு பொருள்கள் வழங்குதலும் அவற்றின் திருத்த வேலைகளும்.
13. இறப்பர் முத்திரைகள் செய்து வழங்குதல்.
14. சீருடைத் துணிகள் மற்றும் துணிவகைகள் வழங்குதல்.
15. மின் பிறப்பாக்கிகள், மின் மோட்டார், நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்குதலும் அவற்றின் திருத்த வேலைகளும்.
16. மேற் கூறப்பட்டவற்றில் உட்படுத்தப்படாத ஏனைய பொருள்கள், சேவைகள்.

கே. கணேஷ்
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி/551005)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 3ஆவது போட்டியிலிருந்து பக்னரை நீக்கியது ஐ.சி.சி.

## மேன்முறையீட்டுத் தீர்ப்பு வெளிவரும் வரை ஹர்பஜன் விளையாட அனுமதி

டுபாய், ஜன.09

இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள 3ஆவது டெஸ்ட் போட்டியின் நடுவர் குழாமிலிருந்து ஸ்ரீவ் பக்னரை சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று அதிரடியாக நீக்கியது. அத்துடன் மேன்முறையீட்டுத் தீர்ப்பு வெளிவரும் வரை ஹர்பஜன் சிங் அடுத்துவரும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடலாம் எனவும் ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இந்தியாவின் கோரிக்கைகளில் ஒன்றான ஸ்ரீவ் பக்னர் நீக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து 3ஆவது டெஸ்ட் போட்டி நடைபெறும் சாத்தியம் தென்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், நேற்று மாலைவரை இந்திய அணி கான்பராவுக்குச் செல்லாமல் சிட்னியிலேயே தங்கியிருந்தது. நேற்றைய பொழுதை அவர்கள் சிட்னி பொண்டி கடற்கரையில் சந்தோசமாகக் கழித்தனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கான்பராவில் எதிர்வரும் 16ஆம் திகதி நடைபெறவுள்ள 3ஆவது போட்டியிலிருந்து ஸ்ரீவ்பக்னரைநீக்குவது என்ற முடிவைஐ.சி.சியின் நிறைவேற்று அதிகாரி மல்கம் ஸ்பீட் நேற்று உத்தியோகபூர்வமாக ஊடகங்களுக்கு அறிவித்தார். அங்கு அவர் கூறியவை வருமாறு:-

''நடுவரின்தீர்ப்புகள்குறித்துக்கடந்தவாரத்தில் பல முறைப்பாடுகள் வெளிவந்திருந்தமையை நாங்கள் அவதானித்திருந்தோம். மிக இக்கட்டான நிலையில் நாங்கள் உள்ளோம். 2006ஆம் ஆண்டு ஓவல் மைதானத்தில் நடந்ததைப் போன்று தற்போதும் உலகக் கிரிக்கெட் மிகவும் இக்கட்டில் உள்ளது. பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவர சில முடிவுகளை எடுத்தாக வேண்டிய நிலைக்கு நாங்கள் தள்ளப்பட்டுள்ளோம். அடுத்த போட்டியிலிருந்து ஸ்ரீவ் பக்னரை நீக்குவதென்று முடிவெடுத்துள்ளோம். அவருக்குப் பதிலாக பில்லி பௌடன் கடமையாற்றுவார்.

''கான்பராவில் நடைபெறவுள்ள மூன்றாவது போட்டி சிறப்பான முறையில் நடைபெற மைக் புரொக்டருடன் ரஞ்சன் மடுகல்லேயும் போட்டி நடுவராகச் செயற்படுவார். ஹர்பஜன் மீதான மேன்முறையீட்டுத் தீர்ப்பு வெளிவரும் வரை அவர் போட்டிகளில் பங்குபற்றலாம்.'' - என்று மல்கம் ஸ்பீட் தெரிவித்தார்.

இதேவேளை, ஹர்பஜன் மீதான தடை நீக்கப்பட்டால் மாத்திரமே அடுத்த போட்டியில் தாங்கள் பங்குபற்றுவர் என்று இந்திய வீரர்கள் தெரிவித்துள்ளார்கள் என்று மற்றொரு தகவல் வெளிவந்திருக்கின்றது.

## ஹர்பஜனுக்குத் தடை சரியான முடிவுதான்!

### நியாயப்படுத்துகிறார் போட்டி நடுவர்

சிட்னி, ஜன.09

இந்தியச் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங்கிற்கு மூன்று போட்டிகள் தடையை விதித்த சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் போட்டி நடுவர் மைக்புரொக்டர், தனது முடிவை நியாயப்படுத்தியுள்ளார்.

''நான் ஒரு தென்னாபிரிக்கன். இனவெறி என்ற சொல்லின் அர்த்தம் எனக்குப் புரியும்.'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''நிற வெறியுடனேயே பல காலம் வாழ்ந்தவன் நான். இதனை வெறுமனே ஆஸ்திரேலியா, இந்தியா விடயமாகக் கருதவில்லை.'' - எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹர்பஜன் சிங் குறித்து எடுத்த முடிவில் உறுதியாக உள்ளார் எனவும் தான் நேர்மையாக செயற்பட்டு முடிவெடுத்தார் எனவும் இந்தப் போட்டித் தொடர் முழுவதும் பணியாற்ற விரும்புகின்றார் என்றும் புரொக்டர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அணியுடன் தனக்கு பிரச்சினைகள் இல்லையெனவும் அவர்களுடன் நல்லுறவு காணப்படுதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தப் போட்டி (இரண்டாவது டெஸ்ட்) தனக்கு மிகவும் கடினமானதாக காணப்பட்டதாகவும் ஒரு சில மணிநேரமே உறங்கினார் என்றும், தான் சந்தித்த மிகவும் கடினமான அனுபவம் இதுவெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



சிட்னியிலுள்ள பொண்டி பீச்சில் உற்சாகமாகப் பொழுதைக் கழித்த இந்தியக் கிரிக்கெட் வீரர்கள் ஹர்பஜன், யுவராஜ்சிங், டோனி.

## கிறிஸ் கெய்ல் இல்லை!

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் கிறிஸ் கெய்ல் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது டெஸ்ட்டில் இடதுகைப் பெருவிரலில் ஏற்பட்ட காயம் காரணமாகவே அவருக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளது.

தென்னா பிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் செய்து மேற்கிந்தியத் தீவுகள் அணி விளையாடுகின்றது. முதல் இரண்டு போட்டிகளின் முடிவிலும் தொடர் 1-1 எனச் சமநிலை பெற்றுள்ளது. தொடரைத் தீர்மானிக்கும் முக்கிய போட்டி நாளை டர்பனில் தொடங்கவுள்ளது. இந்தப் போட்டியில் மேற்கிந்தித் தீவுகளின் தற்காலிக அணித்தலைவரும் ஆரம்ப வீரருமான கிறிஸ் கெய்ல் காயம் காரணமாக விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவருக்குப் பதிலாக டவயினி பிராவோ அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## விளையாட்டு அரங்குகளில்

## ஹர்பஜனுக்கு ஆதரவு

ஹர்பஜனுக்கு தடை விதிக்கப்பட்டது சரியல்ல என்று ஆஸி. ரசிகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஆஸி. இணையதளங்களில் இது குறித்து நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகளின் முடிவுகள்.

★ ஹர்பஜனுக்கு தடை விதிக்கப்பட்டது சரியல்ல என்று 86 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர்.

★ எதிரணி வீரர்களை ஆஸி. வீரர்கள் கிண்டல் செய்வது பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. மற்றைய அணி வீரர்கள் பதிலடி கொடுத்தால் அதைஆஸி.வீரர்களால்ஏற்றுக்கொள்ளமுடியவில்லை என்று 38 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர்.

★ சிட்னி டெஸ்ட்டில் நடுவர்களின் தவறான முடிவுகளாலேயே ஆஸி. அணி வெற்றி பெற்றது என்றும் பெரும்பாலான ரசிகர்கள் வாக்களித்துள்ளனர். இந்த இணையதளங்களில் ஆஸி.ரசிகர்கள் பதிவு செய்த சில சுவையான கருத்துகள் வருமாறு:-

ஹர்பஜனுக்குத் தடை விதிக்கப்பட்டதால் அதிக மகிழ்ச்சி அடைந்த ஒரே நபர் அணித் தலைவர் பொண்டிங்காகத்தான் இருக்க முடியும். அடுத்து வரும் 2 டெஸ்ட் போட்டிகளிலும் பொண்டிங் கூடுதலாக கொஞ்ச நேரம் கிரீசில் நிற்க முடியுமே. (ஹர்பஜனின் பந்துவீச்சில் பொண்டிங் தொடர்ச்சியாக ஆட்டமிழந்து வருவது குறிப்பிடத்தக்கது).

ஆஸி.ரசிகை என்ற வகையில் சிட்னி டெஸ்ட்டில் நம் முன்னணி வீரர்கள் குறுக்கு வழியில் வெற்றி பெறச் செய்த முயற்சிகளைப் பார்த்து வெட்கித் தலை குனிகிறேன். நடுவர்கள் செய்த தவறுகள் பற்றி சொல்லவே வேண்டாம். இந்திய வீரர்களுக்கு அடுத்து எந்த வகையில் தவறான ஆட்டமிழப்புக் கொடுக்கப் போகிறார்கள் என்பதை பார்ப்பதற்காகவே நான் ரீவியை விட்டு எங்கும் நகரவில்லை. விளையாட்டில் யார் வெற்றி பெறுகிறார்கள் என்பது முக்கியம் அல்ல. எப்படி விளையாடுகிறோம் என்பதுதான் முக்கியம். - இவ்வாறு ஆஸி. ரசிகர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

## தென் கொரியாவில் தீ விபத்து 40 பேர் உடல்கருகி உயிரிழப்பு

சியோல், ஜன.09

ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென் கொரியர்கள் நேற்றுமுன்தினம் இறந்தவர்களுக்காக நடத்திய சடங்குகளின் விளைவாக, களஞ்சியமொன்று தீக்கிரையாகிவிட்டது. இதில் சுமார் 40 பேர் கொல்லப்பட்டனர். மற்றும் 10 பேர் தீக்காயங்களுக்கு உள்ளாகினர்.

தென்கொரியர்கள் இறந்தவர்களுக்கான சடங்குகளில் ஊதுபத்திகளைப் பற்ற வைத்தும், மலர்களைத் தூவியும் பட்டாசுகளைக் கொழுத்தியும் அனுஷ்டானங்களில் ஈடுபட்டார்கள். வெடிகளால் பற்றிய தீயினால், களஞ்சியசாலை ஒன்று இரையாகி விட்டது என விசாரணையில் தெரியவந்துள்ளது.

## கொசோவோவைத் தனிநாடாக அறிவிக்க கூட்டரசு ஒன்றை நிறுவிக்கொள்ள முடிவு

சேர்பியா, ஜன.09

சேர்பியாவிலிருந்து கொசோவோவை பிரித்து ஒரு சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்துவதற்காக கூட்டரசு ஒன்றை நிறுவுவதற்கு அந்நாட்டு ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணங்கியுள்ளன. இதற்கு வழிசமைக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் இவ்விரு கட்சிகளும் கைச்சாத்திட்டுள்ளன.

120 ஆசனங்களைக் கொண்ட மாகாணப் பேரவையில் இன்று புதன்கிழமை இவ்வுடன்படிக்கை வாக்கெடுப்புக்கு விடப்படும் என இக்கட்சிகள் கூட்டாக அறிவித்தல் விடுத்துள்ளன.

சேர்பியாவிலிருந்து கொசோவோவை ஒரு சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்துவதற்கான ஓர் அரசு இவ்வுடன்படிக்கையின் மூலம் நிறுவப்படும். இவ்வாண்டு இச் சுதந்திரப் பிரகடனம் இடம்பெறலாம் என முக்கிய இவ்விரு கட்சிகளும் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

கொசோவோவின் கேந்திர எதிர்க்கட்சியான ஜனநாயக லீக்கின் தலைவர் பத்மிர் செஜ்டியுடன் புரிந்துணர்வு இணக்கப்பாட்டோடு எமது கொஸோவோ ஜனநாயகக் கட்சி இணைந்து செயற்படும் என அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் தீவிரவாதத் தலைவருமான ஹசீம் தச்சி தெரிவித்துள்ளார்.

இப்புரிந்துணர்வு உடன்படிக்கையில் இவ்விருவரும் கைச்சாத்திட்டுள்ளனர். பிரதமர் அந்தஸ்தில் உள்ள ஹசீம் தச்சி இது தொடர்பாக செய்தியாளர் மத்தியில் விளக்கமளித்துள்ளார்.

கொசோவோவை சுதந்திர நாடாகவும் அதனை ஜனநாயக நாடாகவும் மாற்றியமைப்பதே உத்தேச அரசினதும் சகல கொஸோவோ பிரஜைகளினதும் தலையாய பணியாக இருக்குமென அவர் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.



உடன்படிக்கையில் கைச்சாத்திடும் ஆளும், எதிர்க்கட்சித் தலைவர்கள்.

கொசோவோ மாகாணத்தின் சுதந்திரக் கோரிக்கையை இவ்விரு பெரும் கட்சிகளும் வலியுறுத்தியுள்ளன. இம்மாகாணத்தில் வாழ்வோரில் 90 சதவீதத்திற்கு மேற்பட்டோர் அல்பேனிய இனத்தினராவர்.

சேர்பியாவிலிருந்து கொசோவோ மாகாணத்துக்கு சுதந்திரம் ஈட்டுவதற்கான பணிகளை இவ்விரு கட்சிகளும் முடுக்கி விட முன்வந்துள்ளன. சுதந்திரக் கோரிக்கைக்கு மேற்கத்தேய அரசுகள் ஆதரவு வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மாலைதீவு ஜனாதிபதி அருந்தப்பு!

### சிறுவன் ஒருவன் காப்பாற்றினான்



மாலைதீவு, ஜன.09

மாலைதீவு ஜனாதிபதி அப்தல் கயூமை நபர் ஒருவர் கத்தியால் குத்த முயன்ற வேளை 15 வயது சிறுவனொருவன் அந்த நபரின் கத்தியை பறித்து ஜனாதிபதியை காப்பாற்றியுள்ளான்.

ஜனாதிபதி மக்களைச் சந்தித்து அவர்களுடன் கைகுலுக்கிக் கொண்டிருந்த வேளை நபர் ஒருவர் அவரை பெரிய கத்தியால் குத்த முயன்றார் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதியின் பேச்சாளர் அவ்வேளை சிறுனொருவன் கத்தியை பறித்து ஜனாதிபதியை காப்பாற்றினான் எனவும் அவ்வேளை சிறுவனின் கையில் காயமேற்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு காயமேற்படவில்லை. எனினும் இது நிச்சயமாக கொலை முயற்சியே என்றும் அவரது உடையில் இரத்தம் காணப்பட்டதாகவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பிட்ட நபர் தேசியக் கொடியில் கத்தியை மறைத்து எடுத்து வந்துள்ளார்.

இதன் பின்னர் ஜனாதிபதி வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றியுள்ளார். அவ்வேளை குறிப்பிட்ட சிறுவனை பாராட்டியுள்ளதுடன் மக்களை அமைதி காக்குமாறும் கேட்டுள்ளார்.

ஜனாதிபதி கயூமின் அரசியல் எதிரிகளே இந்தக் கொலை முயற்சியை மேற்கொண்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




## ஸ்கொட்லண்ட் யாட் தொடர்ந்து விசாரணை

இஸ்லாமாபாத், ஜன.09

பெனாஸிர் படுகொலை தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ள ஸ்கொட்லாந்து பொலிஸின் ஐந்து அதிகாரிகள் குழு, பெனாஸிர் உடல் எடுத்துச் செல்லப்பட்ட ராவல்பிண்டி பொது மருத்துவமனையில், இரண்டு டாக்டர்களிடம் ஏற்கனவே விசாரணை நடத்தியுள்ளது.

முன்னதாக பெனாஸிர் படுகொலை செய்யப்பட்ட இடத்தையும் இக்குழுவினர் பார்வையிட்டனர். விசாரணை தொடர்பாக ராவல்பிண்டி பொலிஸாருடன் நேற்றுமுன்தினம் ஆலோசனை நடத்திய ஸ்கொட்லாந்துக் குழுவினர், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெனாஸிரின் குண்டு துளைக்காத காரையும் பார்வையிட்டனர்.

லிக்குவாட் பாக்கில், மனிதக் குண்டுவெடிப்பால் ஏற்பட்ட சேதத்தையும் ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸார் பார்வையிட்டனர். நேற்றும், மருத்துவமனையில் சில டாக்டர்களிடம் ஸ்கொட்லாந்துக் குழு விசாரணை நடத்தினர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகள் சிலவற்றின் உயர்தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.8

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெறு பேறுகளை பாடசாலைகளின் அதிபர்கள் உதயனுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.அவர்களால் உறுதிப்படுத் தப்பட்டு அனுப்பப்பட்ட முடிவுகள் வரு மாறு-

**நுனியன் கல்லூரி**

**கணிதம்:** ச.ஜெயந்தன் 3ஏ, த.பிரசாத் 2ஏபி, ம.கஜந் தன் ஏபிசி.

**வணிகம்:** ஜெனட்சுதர்சினி 3ஏ, த.தயாளவன் 2ஏபி, து.தர்மதா 2ஏசி

**கலை:** க.கீர்த்தனா 3ஏ (மாவட்டனிலை - 01), சு.டினேஸ்குமார் 3ஏ, ச.ரஜீத் 2ஏபி, சி.அறிஞன் 2ஏபி, க.அருண்ராஜ் 2ஏபி, சு.யூட்திலீபன் 2ஏசி, த.புஸ்ப நிரோஜினி 2ஏசி, த.சிவரஞ்சினி ஏ2பி, கு.சுகன்ஜா ஏ2பி, த.தனுஜா ஏ2பி, ஆ.சோபனா ஏ2பி, கு.குண ரோஜன் 3பி, க.பவித்திரா ஏபிசி, சொ.பிரேமலதா ஏபிசி, கோ.சயந்தா ஏபிசி, இ.டர்சன் ஏபிசி, ம.நிரோஷிகா ஏபிசி, த.பிரியங்கா ஏபிசி, தி.சாளினி ஏ2சி,

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

**கணிதம்:** அ.கார்த்திக் 3ஏ, இ.மோகனகார் 3ஏ, க.கர்ஷன் 2ஏபி, இ.சிவகுணாளன் ஏபிசி, கு.மதீஸ் ஏபிசி, ம.துவாரகன் 3பி, ம.தினேஸ் 3பி, ம.உதயராஜ் 3பி, ச.சசிகுமார் 3பி, செ.சோபிஜா 3பி, தெ.ஜயகரன் 3பி, சி.முகுந்தன் 2பிசி, ம.திருமகள் 2பிசி,

**உயிரியல்:** ஜெ.ஜீவகன் 2ஏபி, த.யுறுக்கன் 2ஏபி, பா.கஜவர்ஷன் 2பிசி,

**வர்த்தகம்:** சி.இலக்கியா 3ஏ, பொ.ரெனோசா 3ஏ, க.கிருபாகரி 3ஏ, வை.துவாரகன் 2ஏபி, ச.திவகுமரன் 2ஏபி, சூ.தர்சிகா ஏ2பி, தி.தர்சிகா ஏ2பி, க.கஜேந்திரராசா ஏபிசி, ச.சுபித்திரன் 3பி, ஆ.சிந்துஜா 2பிசி, செ.தர்சா 2பிசி.

**கலை:** இ.ரதிகா 2ஏபி, சி.கார்த்திகா 2ஏபி, ந.ஜெயந்தி 2ஏபி, ம.சிவலோதினி 2ஏபி, நா.தர்மினி 2ஏபி, ப.சுதர்சினி 2ஏபி, பா.செந்துரு 2ஏபி, யோ.அனுஷியா 2ஏசி, த.சிறிகலா 2ஏசி, மோ.அபிராமி 2ஏசி, யோ.கஜேந்திரா ஏ2பி, கோ.அபர்ணா ஏ2பி, சி.சசி கௌரி ஏ2பி, தெ.நர்மதா ஏ2பி, நி.சந்தியா ஏ2பி, மோ.மாலதி ஏ2பி, செ.வினுசியா ஏ2பி, ஏ.தேவகுமார் ஏ2சி, சு.சுரேகா ஏபிசி, சி.ஜீவிதா ஏபிசி, த.தஜிகா ஏபிசி, த.தனுசன் ஏபிசி, வ.கபிலன் ஏபிசி, து.அர்ஜுன் ஏபிசி, தி.கபிலா ஏபிசி, சநிலானிஏபிசி, குநந்த கோபன் ஏ2சி, வா.பிரதீபா 3பி, ப.விஜிதா 3பி, ம.அஜாலினி 3பி, சி.ரேணுகா 3பி, ந.டிசானி 2பிசி, சு.அஜித்கான் 2பிசி.




## பொங்கல் சிறப்புத் தள்ளுபடி விற்பனை

சண்TV,K.TV, சண் மியூசிக், சண் நியூஸ், சுட்டிTV, கலைஞர்TV, RAJ. TV, RAJ. TV PLUS, விஜய் TV, மெகா TV, மக்கள் TV, விண் TV உட்பட 180 சனல்கள் வரை கண்டுகளிக்கக் கூடிய DISH.TV பக்கேஜ்கள் மற்றும் கேபிள்TV உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

- DISH.TV க்குரிய கட்டணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.
- வியாபாரிகளுக்கு சிறப்பு விலைக்கழிவு வழங்கப்படும்.
- ஜனவரி 15 ஆம் திகதிவரை DISH.TV PACKAGE இற்கு மட்டும் இவ்விலைக் கழிவு வழங்கப்படும்.

DISH.TV (சினேகா) பக்கேஜ் ரூபா 15000 இல் இருந்து. பொங்கல் வரை மட்டுமே

மேலதிக விவரங்களுக்கு:
SATS - TECH ENGINEERS,
இலக்கம்: 182, கே.கே.எஸ். வீதி,
(குளப்பிட்டிச் சேச் அருகாமை), கொக்குவில்.
தொலைபேசி: 021 222 5908


## நன்றி நவிலல்

வியாபாரிமூலை, பருத்தித்துறையைச் சேர்ந்த

**நாகலிங்கபிள்ளை சரவணபவன்**

அவர்களின் இறுதிக்கிரியைகள்

06.01.2008 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன. அதில் கலந்து கொண்டு ஆறுதல் அளித்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகளைப் பகிர்ந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
ச.சங்கர் (கனடா)

குடும்பத்தினர்.


**விற்பனைக்குண்டு**

தும்பளை வீதி, பருத்தித்துறையில் நன்னீர்க் கிணற்றுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
ஜெயபிரகாஸ்
பாதணி நிலையம்
பஸ் நிலையம்,
பருத்தித்துறை.








## IMMEDIATE VACANCIES

**1) Post of Accountant**

Qualifications & Experience

- Should have Advance Level Qualification or Equivalent Qualifications.
- In addition, applicants should have at least 3 years experience in relavant field.
- Good communication skills.
- Fluent spoken and written English.
- Should have computer knowledge.
- Age limit 25-35yrs

Apply within 7 days giving full details of past and present employment, including names and addresses of 2 non - relafed referees. Please write the position applied for on the top left-hand corner of the envelop.

2) Post of Administrative Officer.
3) Post fo computer typist.

Advt.No. 3045,
C/O. Uthayan.


## கலை ஒளி மன்றம்

நடத்தும்

தமிழர் கலாசார பண்பாட்டு விழுமியங்களைச் சித்திரிக்கும்

## ஓவியப் போட்டி - 2008

(யாழ்ப்பாண மாவட்டம்)

- நேரம்: 3 மணி
- போட்டிப் பிரிவு

- பிரிவு I 08 - 11 பிரிவு IV 17 - 19
- பிரிவு II 11 -13 பிரிவு V 19 வயதிற்கு மேல் (ஆசிரியர்கள் அல்லாதவர்கள்)
- பிரிவு III 14 -16

★ வரைதாள் போட்டி நடைபெறும் மண்டபத்தில் வழங்கப்படும்.
★ **வர்ணங்கள்:** வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள் என்பவற்றைப் பயன்படுத்தலாம்.
★ போட்டிக்கான தலைப்புகள்

**பிரிவு I**
1) நான் அம்மா, அப்பா (தமிழர் பண்பாட்டைச் சித்திரிக்கும் உடையமைப்பில்)
2) குருவணக்கம் செய்யும் மாணவர்கள்.
3) கிட்டிப்புள் விளையாடும் சிறுவர்கள்.

**பிரிவு II**
1) காவடியாட்டம் 2) தைப்பொங்கல் திருநாள் 3) கோலமிடும் பெண் 4) தீ மிதித்தல்.

**பிரிவு III**
1) தவில் கச்சேரி 2) சூரன்போர் 3) அன்னதானச்சாலை (வாழை இலை)
4) சிலம்பு விளையாட்டில் ஈடுபடும் வீரர்கள்
5) கிராமிய இளைஞர் கூட்டத்தில் உறிஅடி அடித்தல் நிகழ்வு.

**பிரிவு IV**
1) மாட்டுவண்டிச் சவாரி 2) சித்திரத்தேர் உலா எடுக்கும் பெண்கள்.
3) போர் தேங்காய் அடித்தல். 4) பூப்புனித நீராட்டு விழாவில் ஆரத்தி
5) தமிழர் பாரம்பரிய அம்சத்தை வெளிப்படுத்தும் மரண ஊர்வலம்.

**பிரிவு V**
1) "பனை மரச் சூழலும் அதன் உற்பத்தியில் ஈடுபடுவோரும்"
2) "கும்மி" "கோலாட்டம்" "காகம்" "பரதநாட்டியம்" இதில் ஒன்று.
3) "தூக்குக்காவடி"
4) "தமிழர் பாரம்பரிய அம்சங்களைக் கொண்ட திருமணச்சடங்கு.

**மாதிரி விண்ணப்பப் படிவம்:**

பாடசாலையின் பெயர் : ..................................................
மாணவர் பெயர்: ...................... வயது: .......... பிரிவு: ........

.................................. ..................................
பொறுப்பாசிரியர் அதிபர்

★ பாடசாலை மாணவன் அதிபரூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.
★ தனிப்பட்ட போட்டியாளர் கிராம அலுவலர் ஒப்பம் பெற்று விண்ணப்பித்தல் வேண்டும்.

1) முழுப்பெயர் :..................................................
2) முகவரி :..................................................
3) கிராம அலுவலர் பிரிவு :..................................................

.................................. ..................................
விண்ணப்பதாரி ஒப்பம் கிராம உத்தியோகத்தர் கையொப்பம்

- விண்ணப்ப முடிவுத் திகதி : 18 ஜனவரி 2008
- விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:

**கலையொளி நிறுவனம்** *ஞானபதி, இணுவில் மேற்கு, இணுவில்.*

★ போட்டி இடம்பெறும் இடம், திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
★ ஒவ்வொரு பிரிவிலும் வழங்கப்படும் பரிசில்கள் விபரம்.
முதலாம் பரிசு - ரூ 3000/- 2ஆம் பரிசு - ரூ 2000/- 3ஆம் பரிசு - ரூ 1500/-
- 10 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும். சான்றிதழ்களும் வழங்கப்படும்.

குறிப்பு: நடுவர்கள் தீர்ப்பு இறுதி முடிவாகக் கருதப்படும்.

*தலைவர், கலையொளி மன்றம், இணுவில்.*

## இதய அஞ்சலி



கிறிஸ்துவின் தோழனும் இறைமக்களின் ஊழியனுமாகிய

அருட்தந்தை

**சா.பி.கிருபானந்தன்** அடிகளார்

அவர்களின் மரணச்செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைவதோடு அன்னாரின் ஆத்மா இறைவனின் பாதத்தில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*392/6, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (69915)

N.J.இராஜநாயகம் (சகோதரன்)
(பிரான்சிஸ்கன் மூன்றாம் சபை உறுப்பினர்)

## 12ஆம் ஆண்டு நினைவலைகள்

திருமதி
**கந்தசாமி**
**இராசம்மா**

பிறப்பு
04-02-1950

இறப்பு
26-12-1996



திதி: பிரதமை

அன்பின் வழியது நடந்து - அறிவால்
உயிர் வளர்த்து என்புருக அருள்சுரந்து
எழில்முகம் காட்டிய தாயே - எம்
உள்ளம் நினைவு இழக்கும்வரை காயா,
பன்னிரெண்டு வருடத்தின் பசிய நினைவுகளை

*"ரஜனி மகால்"*
*சமரபாகு,*
*வல்வெட்டித்துறை.* (69923)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள்களின் விலைகளை உயர்த்த வேண்டிய தேவை யாழ்.மாவட்டத்தில் இன்னும் ஏற்படவில்லை

## மீறுவோர்மீது கடும் நடவடிக்கையென அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ். மாவட்டத்தில் பொருள்களின் விலைகளை உயர்த்த வேண்டிய தேவை எதுவும் தற்போது ஏற்படவில்லை. எனவே பொருள்களின் விலைகளை உயர்த்தி மக்களின் வாழ்க்கைச் செலவை அதிகரிப்பவர்கள் மீது மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.



இவ்வாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொருள்களின் விலையேற்றம், விலைத் தளம்பல் தொடர்பாக அரச அதிபர் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதிலேயே அவர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும் அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் பொருள்கள் அனுப்பிவைக்கப்படும் பொழுது அப்பொருள்கள் யாவும் யாழ்.மாவட்டத்தில் உள்ள 24 ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக 523 கிளைகளின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

ப.நோ.கூ.சங்கங்களுக்கான விற்பனை விலைகள் அரசாங்க அதிபருடன் ஆலோசித்தே தீர்மானிக்கப்படுகின்றன.

தீர்மானிக்கப்படும் விலைகளுக்கு அமைவாக ப.நோ.கூ.சங்கங்கள் பொருள்களை விற்பனை செய்ய வேண்டும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், பிரதேச செயலர்கள்/ உதவி அரசாங்க அதிபர்கள், பாவனையாளர், அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஆகியோரால் மேற்பார்வை செய்யப்படுகின்றது.

தற்போது ப.நோ.கூ.சங்கத்தில் அரிசி, சீனி, கோதுமை மா, பருப்பு, பால்மா, தேயிலை, சவர்க்காரம் ஆகிய பொருள்கள் மாத்திரமே விநியோகிக்கப்படுகின்றன. ஏனைய பொருள்கள் புதிதாகத் தருவிக்கப்படுவது இல்லை.

தனியார் துறையினரால் கொண்டுவரப்படும் பொருள்களுக்குரிய அனுமதி அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படுகின்றது.

இப்பொருள்களைக் கொண்டுவருவதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பங்கள் செய்யப்படும் பொழுது விண்ணப்பங்களைக் கொடுக்கும் ஒவ்வொரு கப்பல் நிறுவனமும், பொருள்களைக் கொண்டு வருபவர்களும் இணைந்து யாழ்.மாவட்டத்திற்குக் கொண்டுவரும் பொருள்களுக்கான விற்பனை செய்யக்கூடிய விலைகளை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கின்றார்கள்.

யாழ்.மாவட்டத்திற்குப் பொருள்களைக் கொண்டுவருகின்ற நிறுவனங்கள் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்கும் விலையில் பொருள்களைப் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கும் கூடிய விலைக்கு யாராவது விற்பனை செய்தால் அதற்குரிய பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து அக்குறைபாடுகளைத் தீர்ப்பதற்கான முழுப் பொறுப்புகளையும் பொருள்களைத் தருவிப்பவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இது விடயத்தில் யாழ்.வணிகர் கழகம் தங்களுடைய அங்கத்தவர்களுக்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் எனவும் மேலும் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

எவ்வாறாயினும் மாவட்டச் செயலகம் வர்த்தகர்களின் நடவடிக்கைகளை மிகவும் உன்னிப்பாகவே அவதானித்துக் கொண்டு வருகின்றது.

இவ்வார இறுதியில் திடீரெனப் பொருள்களின் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக்கும்பொழுது விலை அதிகரிப்பிற்கான தகுந்த காரணங்கள் எதுவும் இருப்பதாக ஏற்றுக்கொள்ள இயலாதுள்ளது.

ஆகவே சகல வர்த்தகர்களும் தாங்கள் அளிக்கின்ற உறுதிமொழிக்கு அமைவாக நடந்து இம் மாவட்டத்தில் வதிகின்ற மக்களின் வாழ்க்கைச் செலவை மேலும் அதிகரிக்காமல் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தவறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்கு மாவட்ட நிர்வாகம் தள்ளப்பட்டுள்ளது என்பதை சம்பந்தப்பட்ட சகலருக்கும் தெரிவிக்கிறேன் - என்றுள்ளது. (2-203)

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட 42 வைத்தியர்களில் 18 பேர் கொழும்பு திரும்பினர்

## உரிய வசதிகள்,பாதுகாப்பு இல்லையாம்

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் நியமிக்கப்பட்டிருந்த 42 வைத்தியர்களில் 18 பேர் கொழும்பு திரும்பியுள்ளனர்.

அரசாங்கத்தினால் உறுதியளிக்கப்பட்டது போன்று தமக்கு உணவு மற்றும் இருப்பிட வசதிகள் வழங்கப்படவில்லை என்றும் வைத்தியசாலையில் கடமையாற்றுவதற்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்றும் கொழும்பு திரும்பிய அவர்கள் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்திடம் முறையிட்டுள்ளனர்.

போதனா வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட சிங்கள மற்றும் முஸ்லிம் வைத்தியர்கள் 42 பேரும் வைத்தியசாலையில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றிருந்தனர் என்றும், அவர்களில் 13 பேர் தமக்கு உரிய வசதிகள் செய்யப்படவில்லை எனத் தெரிவித்துக் கொழும்புக்குத் திரும்பியுள்ளனர் என்றும் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஞானசோதி தெரிவித்தார். ஏனையோர் தொடர்ந்து தமது கடமையில் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 154 வீடுகள் இன்று கையளிக்கப்படவுள்ளன

நெல்லியடி,ஜன.9

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென பருத்தித்துறை கிழக்கு மற்றும் சக்கோட்டைப் பகுதிகளில் அமைக்கப்பட்ட நிரந்தர வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பருத்தித்துறை கிழக்கு மற்றும் சக்கோட்டை பகுதிகளில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட 154 நிரந்தர வீடுகளும் 154 மலசல கூடங்களும் கையளிக்கப்படவுள்ளன.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாப்பரசரின் பிரதிநிதி கலாநிதி மாரியோ செனாரியோ ஆண்டகையும், சிறப்பு விருந்தினர்களாக காலி மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஹரல்ட் அன்ரனி ஆண்டகை, யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக இலங்கை கரித்தாஸ் நிறுவன தேசிய இயக்குநர் அருட்திரு டேமியன் பெர்னான்டோ, யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, சுனாமி மேலதிக அரச அதிபர் பி.செந்தில்நந்தனன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (203-155)

# புத்தாண்டு தினத்தன்று சாவகச்சேரிப் பகுதியில் மூன்று வீடுகளில் ஆயுதங்களைக் காட்டிக் கொள்ளை

யாழ்ப்பாணம்,ஜன.9

சாவகச்சேரி நுணாவில் மத்தியில் மூன்று வீடுகளில் முகமூடித் திருடர்களால் பல லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

புத்தாண்டு தினத்தன்று இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கி, இரும்புக் கம்பிகள் சகிதம் கறுப்பு உடை அணிந்து வந்த திருடர்கள் வீடுகளைச் சோதனையிடப் போவதாகச் சிங்களத்தில் கூறினார்கள் எனவும் -

ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்திவிட்டு வீட்டிலுள்ள ஆண்களை அறைகளில் பூட்டிவிட்டு கொள்ளையில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்க நகைகள், பணம், கையடக்கத் தொலைபேசிகள், கைக்கடிகாரங்கள் உட்படப் பல பெறுமதிமிக்க பொருள்கள் திருடப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அரச அலுவலர் ஒருவரின் வீடு உட்பட மூன்று வீடுகளில் இக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

# வளவில் தறித்த மரத்தில் சிக்கி வீதியால் சென்ற குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம்,ஜன.9

வளவொன்றில் தறிக்கப்பட்ட தென்னைமரம் வீதியில் வீழ்ந்தபோது அவ்வழியே சென்ற குடும்பஸ்தர் மரத்தினுள் அகப்பட்டு பலியான சம்பவம் மட்டுவில் தெற்கில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் சடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

நுணாவில் மேற்கைச் சேர்ந்த பரமநாதன் டதமபூ (வயது 31) என்பவரே மரத்தில் சிக்குண்டு பலியானவராவார்.

இவரது மரணம் தொடர்பாகப் பொலிஸார் சாவகச்சேரி நீதிவானிடம் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார். (அ-1-207)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.9

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் சங்கானைப் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் ஒன்றை எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சங்கானையில் நடத்தவுள்ளனர்.

கண, நீரிழிவு, இரத்த அமுக்கம், பல், சர்மநோய் ஆகியவற்றுக்கான பரிசோதனைகளும் பொதுமருத்துவ சிகிச்சையும் நடத்தப்படும்.

கண் பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்படும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளதாகக் கழகச் செயலாளர் லயன். செ.சுப்பிரமணியம் தெரிவித்தார்.(203-207)

* * *

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு பிரிவு கிராம அலுவலராகக் கடமையாற்றி இளைப்பாறிய க.செல்வராசாவுக்குப் பிரிவு மக்கள் எதிர்வரும் 10 ஆம் திகதி பிரிவுபசார விழா நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரி கச்சாய் வீதி முருகமூர்த்தி கோயில் மண்டபத்தில் கிராம அலுவலர் க.சிவசரணநாதன் தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளதா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (203-207)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.9

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி சங்க மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் சி.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு முதன்மை விருந்தினர்களாக யாழ். மாவட்ட உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்கள் பொ.சிவலிங்கம், செ.கனகசபாபதி ஆகியோர் கலந்துகொள்வர். (203-207)

## பருத்தித்துறைப் பங்கில் இலவச கணனிப் பயிற்சி

பருத்தித்துறை, ஜன.9

கிராமிய இளைஞர் யுவதிகளுக்கு கணனிப் பயிற்சிகளை வழங்குவதற்கான இலவச பயிற்சி நெறிகளைப் பருத்தித்துறை பங்குக் கணனிப் பயிற்சியகம் நடத்தவுள்ளது.

இப்பயிற்சி நெறிகளுக்குத் தூர இடத்திலிருந்து வருபவர்களுக்குப் போக்குவரத்துப் படியும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-218)

## தென்மராட்சி லயன்ஸ் கழகத்தால் மரம் நடுகைத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.9

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் கடந்த வாரம் மரம் நடுகைத் திட்டத்தினை ஆரம்பித்துள்ளனர்.

கச்சாய் அ.த.க.பாடசாலையில் மா, மலைவேம்பு ஆகிய மரக்கன்றுகளை நட்டு திட்டத்தினை ஆரம்பித்து வைத்ததாகக் கழகச் செயலாளர் லயன் கா.இராசதுரை தெரிவித்தார். (203-207)



நல்லூர் பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலய பங்குத்தந்தை அருட்திரு லோறன்ஸ் அடிகளார் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிருபடங்களிலும் கலை நிகழ்வுகளில் ஒரு காட்சியை மூன்றாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சித்திர வேலவர் துணை

## அருள்மிகு வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில்- கோப்பாய்
## புனராவர்த்தன பிரதிஸ்டா பஞ்சகுண்ட பட்ஷ
## மகா கும்பாபிஷேக விழா- 23.01.2008

நிகழும் சர்வசித்து வருடம தைத்திங்கள் 9 ஆம் நாள் புதன்கிழமை (23.01.2008) பூச நட்சத்திரமும் சித்தயோகமும் பிரதமைத் திதியும், மீன லக்கினமும் கூடிய காலை 9 மணி 51 நிமிடம் முதல் 11 மணி 22 நிமிடம் வரையுள்ள மங்கள சுப வேளையில் புனராவர்த்தன பிரதிஸ்டா பஞ்ச குண்ட மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு சித்திர வேலாயுதப் பெருமானது திருவருள் கூடியுள்ளது.

### கும்பாபிஷேகக் கிரியைகளும் நிகழ்வுகளும்

18.01.2008 வெள்ளிக்கிழமை பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பம் காலை 7.00 மணி
19.01.2008 சனிக்கிழமை கிரியைகள்- மாலை 3.00 மணி முதல்
20.01.2008 ஞாயிற்றுக்கிழமை கிரியைகள்- மாலை 3.00 மணி முதல்
21.01.2008 திங்கட்கிழமை கிரியைகள்- காலை 10.00 மணி முதல்
22.01.2008 செவ்வாய்க்கிழமை கிரியைகள்-
பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்துதல் காலை 8.00 மணி முதல்
23.01.2008 புதன்கிழமை மகாகும்பாபிஷேகம், மகாபிஷேகம்

* மண்டலாபிஷேகம் 23.01.2008- 07.03.2008 வரை 45 தினங்கள் நடைபெறும்
* 07.03.2008 மண்டலாபிஷேகப் பூர்த்தியில் 1008 சங்காபிஷேகம் இடம்பெறும்
* மண்டலாபிஷேக தினங்களில் பிற்பகல் 12.30 - 1.00 மணிவரை தெய்வீக அருளுரைகள் இடம்பெறும்.

கும்பாபிஷேக விழா பிரதமகுரு: **பிரம்மஸ்ரீ பூரணகீதச்சந்திரக் குருக்கள்**
(ஆலயக் குருக்கள்)

அருள் ஆசி உரைகள்: *ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்*
(நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம்)
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
(உப தலைவர், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் பரிபாலன சபை)


* கும்பாபிஷேகத்திற்குரிய பால், தயிர், இளநீர், புஸ்பங்கள், பூமாலைகள் போன்றவற்றை அர்ப்பணித்து உதவுமாறு அடியார்கள் வேண்டப்படுகின்றீர்கள்.
* கும்பாபிஷேக விழா நிறைவில் மகேஸ்வரபூசை (அன்னதானம்) இடம்பெறும்.
* சித்திரவேலவப் பெருமான் அடியார்கள் விழாவில் கலந்து கொண்டு எம் பெருமானது திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

சுபம்!

**ஆலய தரும பரிபாலன சபை,**
வடகோவை ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகோயில்,
கோப்பாய்.

(69842)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அச்சுவேலி மத்திய விளையாட்டுக்கழக உறுப்பினரும் யாழ்.இந்துக் கல்லூரி மாணவனுமாகிய செல்வன் **கணேசமூர்த்தி மகோதரன்** அவர்கள் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் (2007) கணிதபிரில் 2A, B (தேசியநிலை-52) பெற்று சித்தியடைந்தமையையிட்டு இட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அச்சுவேலி மத்திய வி.க.,
அச்சுவேலி.

**உறுப்பினர்களும் நண்பர்களும்.**

(சி/55094)

## அறிவித்தல்

அரசசார்பற்ற நிறுவனத்தின் நிதியுதவியோடு குடத்தனை கமக்கார அமைப்பினால் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரின் அனுசரணையோடு கீழ்வரும் எல்லைகளுக்குட்பட்ட பகுதியில் பாதுகாப்பான முறையில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. எல்லைகள் கிழக்கு மணற்காட்டு வீதி, தெற்கு பருத்தித்துறை மருதங்கேணி வீதி, வடக்கும் மேற்கும் மருதங்கேணி வீதியையும் மணற்காட்டு வீதியையும் இணைக்கும் ஊரிப்பாதை.

மேற்படி பகுதிக்குள் அடங்கும் காணி உரிமையாளர்கள் அல்லது பரிபாலிப்பவர்கள் 11.01.2008 அன்று உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் (பழைய பணிமனை) காலை 10 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று நடைபெறும் கலந்துரையாடலில் கலந்துகொள்ள தாங்கள் அல்லது தங்கள் சார்பில் ஒருவரை தவறாது அனுப்பி வைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

**வி.இராசதுரை,**
தலைவர், கமக்கார அமைப்பு,
குடத்தனை.

(69912)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் ஆறுமுகம் கந்தையா**
(முன்னாள் ஊழியர், காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

மலர்வு 22*06*1926
உதிர்வு 21*12*2006

திதி: 09.01.2008

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் சிறந்த வழிகாட்டியாய்
ஒளிச்சுடராய்த் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின்
நினைவுகள் ஆண்டு பல சென்றாலும் அகலாது.

கவகசபை ஒழுங்கை,
கீரிமலை வீதி,
காங்கேசன்துறை.

**குடும்பத்தினர்.**

(சி/55095)


# COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008 80% off
O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான விசேடபிரிவுகள் ஆரம்பமாகின்றன.

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= | Honours Diploma in Computer Science<br>5 Months<br>~~10,500~~/= 2,100/= | Diploma in Web page Designing<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= |
| Diploma in Graphic Desining<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= | Diploma in Desktop Publishing<br>4 Months<br>~~7,250~~/= 1,450/= | Diploma in Hardware Engineering<br>3 Months<br>~~7,250~~/= 1,450/= |
| Diploma in Auto CAD<br>3 Months<br>~~7,250~~/= 1,450/= | Diploma in Microsoft Office<br>3 Months<br>1,000/= | Accounting Package<br>3 Months<br>~~8,250~~/= 1,650/= |

50% Off ADVANCE COURSES

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6500~~ | 3250 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I :11/01/2008 11AM
Batch II :12/01/2008 10AM
Batch III :13/01/2008 10AM
Batch IV: 16/01/2008 11AM


## மரத்தில் ஏறிய மாணவன் தவறி வீழ்ந்து காயம்

யாழ்ப்பாணம், ஜன.9

தென்னைமரத்தில் ஏறிய மாணவன் தவறி வீழ்து காயமடைந்தார். இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை அல்லாரை தெற்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சிவராசா திருமாறன் (வயது-15) என்பவரே காயமடைந்தவராவார்.

கை முறிந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாணவன் கொண்டு செல்லப்பட்டார்.

(202-207)

## ஆராதனையும் அஞ்சலியும்

அமரர்
சங்கீத வித்துவான்
**அப்புக்குட்டி திலகேஸ்வரன்**
(அளவெட்டி – வளலாய் – டென்மார்க்)

தோற்றம்: 15.03.1948 மறைவு: 10.12.2007



**திதி: பூர்வபக்க பிரதமை**

தஞ்சாவூர் இசைமரபினை இலங்கையில் பதித்த, ஒப்பற்ற மனோதர்ம இசைக்கலைஞன், அளவை இசைக்கலைமன்ற சங்கீத ஆசிரியராக, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இசையாசிரியராக, கடமையாற்றி பல சீடர்களை உருவாக்கிய இசைப் பேராசானவார். இலங்கையில் பிரபல்யமான இசைப் பேராசான் *வி.கே.நடராஜா*, பிரபல்யமான இந்திய கர்நாடக சங்கீதப் பேராசான் *T.M.தியாகராஜன்* ஆகியோரின் சீடராகி இலங்கையில் பல தெலுங்கு உருப்படிகளையும் இராகம், தாளம், பல்லவி மகோன்னத்துவத்தையும் ஸ்வர, சுருதி, லய சுத்தமாகப் பாடியும் கற்பித்தும் பணியாற்றி, டென் மார்க்கிலும் கர்நாடக சங்கீதத்தை மேலைத் தேய இசையோடு பரிணமிக்கச் செய்தார். அளவை இசைக்கலை மன்றம் அன்னார் நினைவாக 06.01.2008இல் பிரார்த்தனை ஆராதனை நிகழ்வினை அளவெட்டி சதானந்த வித்தியாலயத்தில் உணர்வுபூர்வமாக நடத்தியது. இருபதிற்கும் மேற்பட்ட இசைக்கலைஞர்கள் உரையாற்றினார்கள். அவரது ஆத்மாவின் சங்கீதம் என்றும், எங் கும் நிறைவதாக.

குரீ்டி.சிறுப்பிட்டி கிழக்கு, கிராம அலுவலர் க.ஸ்ரீஸ்கந்தராஜா இல்லத்தில் இன்று (09.01.2008) புதன்கிழமை நடைபெறும் 31ஆம் நாள் ஆராதனையிலும் அஞ்சலியிலும் மதியபோசனத்திலும் யாவரும் பங்குகொண்டு அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.

**அளவெட்டி இசைக்கலைமன்றம்,**
சதானந்தா, அளவெட்டி.

(69811)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதிபர் செல்வி ஜோசேப் பிரான்சிஸ் றூபி ஜோய்

# வறிய மாணவர்கள் பயிலும் பாடசாலைகளுக்கு கல்வித் திணைக்களமும் தொண்டு நிறுவனங்களும் அதிக உதவிகளை வழங்குவது அவசியம்

## நல்லூர் ஞானோதயா வித்தியாசாலைக்கும் அவ்வாறானதோர் உதவி தேவைப்படுகின்றது

பாடசாலைக்கு வருகின்ற மாணவர்கள் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் இருந்தே வருகிறார்கள். இவர்கள் நடந்து வருவதினால் பாடசாலைக்கு வந்து சேரும்போது களைப்படைந்த நிலையிலேயே காணப்படுகின்றார்கள்.

வீட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாகப் பிள்ளைகளிடம் போசாக்கின்மை காணப்படுகின்றது. இதனால் மதிய உணவைப் பகல் 10.30 மணியளவில் வழங்குகின்றோம். இதன் பின்னர் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் கூடிய கவனம் எடுக்கிறார்கள்.

இவ்வாறு கூறுகிறார் நல்லூர் ஞானோதயா வித்தியாசாலை அதிபர் செல்வி ஜோசப் பிரான்ஸிஸ் ரூபி ஜோய். நல்லூர்க் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்டதாகக் கல்வியங்காட்டுச் சந்திக்கு அண்மையாக அமைந்துள்ளது இப் பாடசாலை.

நல்லூர், கோப்பாய் கல்விக் கோட்டங்களின் எல்லையில் அமைந்துள்ள இப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களில் கோப்பாய் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட பிரதேசமான ஆனந்தபுரம் ஞானவைரவர் கோயிலடியைச் சேர்ந்த பிள்ளைகளே அதிகம்.

1870 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பின்னர் அரசாங்கத்தினால் கையேற்கப்பட்டு, அரச பாடசாலையாக மாற்றப்பட்டது. பாடசாலையில் தற்போது தரம் 1 முதல் தரம் 5 வரையான வகுப்புகள் காணப்படுகின்றன. ஐந்து ஆசிரியர்களும் காணப்படுகிறார்கள். ஆரம்பப் பாடசாலையாகக் காணப்படும் இப் பாடசாலையில் ஆரம்பக் கல்விப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருவர் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளார்கள்.

ஏனையவர்கள் நெசவு, கணிதம், விஞ்ஞானம் எனப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் காணப்படுகிறார்கள்.

மாணவர்களின் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி பற்றி அறிந்து கொள்வதற்குப் பாடசாலைப் பக்கம் வருவதில்லை. இதனால் பெற்றோர்களுக்கும் அதிபர், ஆசிரியர்களுக்கும் இடையில் தொடர்பு குறைவாகவே காணப்படுகின்றது. மாணவர்களின் பாடசாலை வரவும் கூட ஒழுங்காகக் காணப்படுவதில்லை. இது விடயத்தில் பெற்றோர் அக்கறை காட்டுவதில்லை என்று சொல்லப்படுகின்றது.

சனநடமாட்டம் குறைந்த பாதையில் பிள்ளைகள் பயணம் செய்து பாடசாலைக்கு செல்லும் நிலை காணப்படுகின்றது. கூலித் தொழிலாளர்களின் பிள்ளைகளே அதிகம் கல்வி கற்கிறார்கள். அவர்

-பவித்திரன்-

களிடம் போதிய வசதி இல்லாமையால் மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வாங்கிக் கொடுப்பதிலும் தாமதங்கள் காட்டப்படுகின்றன.

மாணவர்களிடையே சுகாதாரச் சீர்கேடுகள் காணப்படுகின்றன. பெற்றோர்கள் இதில் அவ்வளவு அக்கறைப்படுவதில்லை. மெல்லக் கற்கும் மாணவர்களாகவே அனைவரும் காணப்படுகிறார்கள்.

தரம் 5 புலமைப் பரிசில் வகுப்பில் 13 பிள்ளைகள் கற்று வருகிறார்கள். 10 பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றியுள்ளார்கள் எனினும் எவரும் சித்தியடையவில்லை.

பாடசாலை அமைந்துள்ள சுற்றாடலில் உள்ள பிள்ளைகள் அங்கு கல்வி கற்கவில்லை. பாடசாலையை கடந்து ஏனைய முன்னணிப் பாடசாலைகளில் சென்று கல்விகற்று வருகின்றார்கள். கடந்த காலத்தில் இடம்பெற்ற இடப்பெயர்வு இப் பாடசாலைகளின் வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகச் சிரேஷ்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இங்கு தரம் 1 இல் கல்வி கற்க அனுமதிக்கப்படும் பிள்ளைகளில் பெரும்பான்மையான பிள்ளைகள் முன்பள்ளிக்கு அனுப்பப்படாத பிள்ளைகளாகக் காணப்படுவதினால் ஆரம்பத்தில் இருந்தே அவர்களுக்குக் கல்வி அறிவை ஊட்டவேண்டியுள்ளது.

வரட்சிக் காலங்களில் பாடசாலைக் கிணற்றில் நீர் வற்றிவிடும். இதனால் அந்தக்காலத்தில் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.




விளையாட்டுடன் கற்றல் என்பதும் மட்டுப் படுத்திய அளவிலேயேயுள்ளது. மைதானம் இல்லை. கற்றல் நடக்கும் வகுப்பறைகளுக்கு மத்தியில் மிகச் சிறிய சிறுவர்விளையாட்டு மைதானம் காணப்படுகின்றது. இதனால் ஒரு வகுப்புப் பிள்ளைகள் விளையாட்டில ஈடுபட்டால் ஏனைய பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கை பாதிக்கப்படுகின்றது.


நல்லூர் ஞானோதயா வித்தியாலயம்

வருடாந்த விளையாட்டுப்போட்டி கூட பாடசாலையில் இருந்து சுமார் முந்நூறு மீற்றர் தூரத்தில் உள்ள அம்மன் கோயில் வளாகத்தில்தான் நடத்தப்படுகின்றது. இங்கு கல்வி பயிலும் சில பிள்ளைகளுக்குப் பிறப்புச் சான்றிதழ்கள் கூட இல்லை. அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு இதுவரை யாரும் அக்கறை காட்டுவதாக இல்லை.

இரண்டு பிரதேச செயலகங்களிலும் சிறுவர்களின் உரிமைகளைப் பேணும் அரச அலுவலர்கள் காணப்படுகின்றார்கள். சிறுவர் உரிமைகள் அமைப்புகளும் காணப்படுகின்றன. இவர்களும் கூட இப் பகுதிக்குச் சென்று கண்காணிப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுவதில்லையென்பதைப் பெற்றோர்களுடன் கலந்துதுரையாடிய போது உணரக்கூடியதாக இருந்தது.

அளவுக்கு அதிகமான அமைப்புகள் இருந்தும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் கவனம் செலுத்தாமல் இருக்கின்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

இதே போன்று அரசசார்பற்ற நிறுவனங்களும் இத்தகைய பாடசாலைகளை இனம் கண்டு மாணவர்களினதும் பாடசாலைகளினதும் தேவைகளையும் பூர்த்தி செய்யமுன் வரவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களும் இப்படியான பாடசாலைகளுக்குக் கூடிய உதவிகளை வழங்க வேண்டும்.

பின்தங்கியபெற்றோர்களின் பிள்ளைகளும்பின்தங்கியே இருக்க வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் இருக்கக் கூடாது. இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் இத்தகைய எண்ணங்கள் தாக்கம் செலுத்துகின்றன என்பதை அயலவர்கள் மற்றும் பெற்றோர்களின் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

இம் மாணவர்களின் கல்வியில் ஆசிரியர்கள் அதிக கவனமும் அக்கறையும் எடுக்கவேண்டுமென பெற்றோர்கள் கூறுகின்றார்கள். தமது பிள்ளைகள் ஏனைய பிள்ளைகளைப் போன்று தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்று கல்வி கற்கும் வசதிகள் தம்மிடம் பொருளாதார ரீதியாக இல்லையெனவும் அவர்கள் கூறுகின்றார்கள்.

எனவே இப்பாடசாலையின் எதிர்கால வளர்ச்சிக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு கல்வித்திணைக்கள அதிகாரிகள், அதிபர், ஆசிரியர்கள் ஆகியோருடன் நிறுவனங்களுக்கும் உண்டு. என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. ✱

---

# வைத்தியனாக வருவதே எனது இலட்சியம் அதற்கு ஹாட்லிக் கல்லூரி ஏணியாகத் திகழ்ந்தது



### உயிரியல்துறையில் முதலிடம் பெற்ற நிமலன் செவ்வி

## நாளும் பத்திரிகை வாசிப்பதன்மூலம் எனது கல்வியறிவு மேம்பாடடைந்தது

எதிர்காலத்தில் ஒரு சிறந்த வைத்தியனாகி மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்பதே எனது இலட்சியம். அந்த இலட்சியத்தை அடைவதற்கு ஹாட்லிக் கல்லூரி ஏணியாகத் திகழ்ந்தது. அதன் மூலம் இந்தச் சாதனையை நான் படைத்திருக்கின்றேன்.

இவ்வாறு கூறுகின்றார் ஜி.சீ.ஈ.உயர் தரப் பரீட்சையில் உயிரியல் துறையில் யாழ். மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் ஸ்ரீசோதிநாதன் நிமலன்.

இவர் உயிரியல் துறையில் 3 ஏ சித்திகளைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் முதலாம் இடத்தையும், தேசிய மட்டத்தில் 4 ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.

தனது சாதனை பற்றி அவர் உதயனுக்கு அளித்த விசேட செவ்வியில் -

தென் புலோலியைச் சேர்ந்த நான் - எனது முன்பள்ளிக் கல்வியை தென் புலோலி புற்றளை சித்தி விநாயகர் முன் பள்ளியில் ஆரம்பித்தேன். பின்னர் புற்றளை மகா வித்தியாலயத்தில் தரம் 5 வரை கல்விகற்றேன். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று பருத்தித்துறைக் ஹாட்லிக் கல்லூரியில் அனுமதியைப் பெற்றேன்.

எனக்கு ஒரு சகோதரியும் ஒரு சகோதரனும் இருக்கின்றனர். சகோதரி புற்றளை மகா வித்தியாலயத்தில் ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் கல்வி கற்கிறார். சகோதரன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் கல்வி கற்கின்றார்.

நான் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்றுச் சிறப்பாகப் பாராட்டப்பட்டேன். இதனால் எனக்கு உற்சாகம் ஏற்பட்டது. நான் கல்வியில் மேம்பாடடைந்து எல்லோராலும் விரும்பப்படும் ஒரு டாக்டராக வரவேண்டும் என்ற இலட்சியமே என்னிடம் உண்டு. புற்றளைப் பிள்ளையார், வல்லிபுர ஆழ்வார் ஆகியோரை [illegible] பெறவேண்டி வருகின்றேன்.

எனது இலட்சியத்தைக் குறிக்கோளாகக் கொண்டு கடினமாகக் கல்வி கற்றேன். பல்வேறு இன்னல்கள், யுத்தகால நிலைமைகள் பல பாதிப்புகளை ஏற்படுத்திய போதும் நான் கல்வியிலேயே அக்கறை காட்டினேன்.

எனது கல்வி மேம்பாட்டிற்கு எனக்கு வழிகாட்டிகளாக இருந்த எனது பெற்றோர், பாடசாலைச் சமூகம், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும் எனது சாதனை மகிழ்வளித்துள்ளது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி எனது வாழ்வில் முக்கிய ஏணியாகத் திகழ்ந்துள்ளது. இக் கல்லூரியில் கல்வி பயின்றதனாலேயே நான் இலகுவாக எனது இலட்சியத்தில் வெற்றிபெற முடிந்தது. நான் தினமும் பத்திரிகை வாசிப்பதனால் எனது கல்வி அறிவு மேம்பாடடைந்தது.

எனது சகோதரன் பேராதனையில் இருந்து எனது பரீட்சை முடிவை தொலைபேசி மூலம் அறிவித்து, எனது சாதனை பற்றிப் பாராட்டியபோது நான் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். சாதனை படைப்பேன் என எண்ணிய போதும் சற்று ஆச்சரியமாகத்தான் இருந்தது.

பரீட்சை பெறுபேற்றை அறிந்து கல்லூரிக்குச் சென்றபோது அதிபர் தெய்வேந்திரராஜா எங்களைக் கண்டதும் பூரிப்புடன் வரவேற்றுப் பாராட்டினார். இந்தச் சாதனை மூலம் நான் எனது இலட்சியத்தை அடைந்துள்ளேன். அதன் மூலம் எமது மக்களுக்கு சேவையாற்ற வாய்ப்புக் கிடைத்ததில் மகிழ்வடைகின்றேன் - என்றார். ✱

-அருணா-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IELTS



Imperative English course of study for job seekers, higher study-students, and also for migrants...

| | Weekdays | Weekends |
|---|---|---|
| Commencement | 28th Jan | 26th Jan |
| Time | 1.00pm | 11.00am |

IIS CITY CAMPUS
#200 Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933
Web: www.iiscitycampus.net


## தும்பளை மரியன்னை ஆலய 125 ஆவது ஆண்டு மலர் வெளியீடு

பருத்தித்துறை, ஜன.9

பருத்தித்துறை, தும்பளை புனித மரியன்னை ஆலய 125ஆவது ஆண்டு நிறைவையொட்டிய 'நூற்றிருபத்தைந்தாவது' ஆண்டு மலர் ஒன்று அடுத்த மாதம் வெளியிடப்படவுள்ளது.

இந்த மலர் வெளியீட்டிற்கான ஒழுங்குகளை ஆலய நிர்வாகிகள் மேற்கொண்டு வருகின்றனர். (203-218)

## சாவகச்சேரியில் இலவச தையல் பயிற்சி வகுப்பு


யாழ்ப்பாணம்,ஜன.9

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பாடசாலைக் கல்வியைப் பூர்த்திசெய்த யுவதிகளுக்கான இலவச தையல் பயிற்சி வகுப்புகளை எதிர்வரும் 15ஆம் திகதி தைப் பொங்கல் தினத்தன்று ஆரம்பிக்கவுள்ளனர்.

மூன்றுமாத காலம் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிநெறிகளில் பங்குபற்ற விரும்பும் ஜி.சீ.ஈ. சாதாரண தரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றிய யுவதிகள் சாவகச்சேரி குகன் ஸ்ரூடியோவில் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு கழகச் செயலாளர் லயன் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (203-207)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சிவப்பிரகாசம் இராசகுலசிங்கம்
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர், வருமான வரித் திணைக்களம்)



தோற்றம் 02 * 05 * 1943
மறைவு 01 * 01 * 2006

திதி: பூர்வபக்க பிரதமை
09.01.2008

ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில்
கொண்டு ஈராண்டு ஆனதுவோ
உங்கள் திருவுருவம் என் மனதைவிட்டு நீங்காது
மண்ணிலே உங்கள் மலர்ந்த முகம் காணாது ஏங்கித் தவிக்கின்றேன்
என்றும் இவ்வுலகில் வானுறையும் தெய்வமாய் வழி நடத்துவாயப்பா.

'தம்பலத்தனை',
துன்னாலை வடக்கு. (69829)

உங்கள் ஆத்ம சாந்திக்காக எந்நாளும் பிரார்த்திக்கும்:
திலகேஸ்வரி (மனைவி).

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
கந்தையா இளையதம்பி
(அதிபர்)



பிறப்பு: 23.03.1936
இறப்பு: 02.01.1995

திதி: 09.01.2008

கண்ணியம் மிக்க சேவை
கருணையே கொண்ட பார்வை
பண்பினை வென்ற உள்ளம்
பாசத்தைப் பகிர்ந்த மனம்
நேசத்தை நீட்டும் கரம்
நிலையற்றுப் போனதாலே
அள்ளிக் கொடுத்த கைக்கு
கிள்ளிப் போட்ட வாய்க்கரிசி
கண்ணீர்ப் பூக்கள் காலடியில் காணிக்கை.

"மிதிலை",
கைதடி நுணாவில், சாவகச்சேரி.

மகன், மனைவி,
உறவினர். (69563)


## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (69833)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள், PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 10.01.2008 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* ராஜீவ் - நவாலி றோட், ஆனைக்கோட்டை.
* மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி.
* P.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
* சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு.


## 6ஆம் மாத நினைவஞ்சலி

மலர்வு 03 * 02 * 1940



உதிர்வு 15 * 07 * 2007

திருமதி தங்கராஜா நகுலாவதி
[ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்]

திதி: 09.01.2008

உறவெனும் நரம்பறுந்து
உயிர் நனைய அழுகின்றோம்
ஜோதியிலே கலந்த நீங்கள்
திரும்பவும் கிடைப்பிரா.

3ஆம் கட்டை,
கல்வியங்காடு.
(69716)

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

## ஈழத்தின் மூத்த எழுத்தாளர்

"வரதர் வெளியீடு" நிறுவன சாதனையாளர்

"சாகித்திய இரத்தினம்"

# தி.ச.வரதராசன் (வரதர்) அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
01.07.1924

உதிர்வு
21.12.2006

திதி: 09.01.2008

'முதறிஞர்' உம்முடன் வாழ்வதற்கு நிச்சயம்
'[illegible]' தவந்தான் செய்திருந்தோம், நாம்.
நெஞ்சம் நிறைந்த கோரிக்கைகளுடன்
வஞ்சம் இன்றி அறிவு தந்த
எம் தந்தையே!
நிறைமக்களாய் வெற்றியுடன்
இவ் உலகில் நாம் வாழ
நல்வழி காட்டினீர்.
ஆண்டொன்று சென்றாலும்
உம் நினைவுகள்,
எம் உயிர் உள்ளவரை எங்களிடம் தொடரும்.
ஓம் சாந்தி!

84/3, மானிப்பாய் சாலை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (69794)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 27 * 01 * 1925



விண்ணில் 10 * 12 * 2007

அமரர் தம்பு கந்தையா
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கடந்த 10.12.2007 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் தொலைபேசி, தபால், தந்தி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், இன்னும் பல வழிகளில் உதவிய அன்புள்ளங்களுக்கும், நண்பர்களுக்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் .

இன்று (09.01.2008) புதன்கிழமை அன்னாரின் சரசாலை இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சரசாலை வடக்கு,
[illegible] (சி/55097)

தங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## புறக்குடத்தில் ஊற்றிய நீராகும் ஐரோப்பிய ஒன்றியத்தின் யோசனை

விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்கும் இலங்கை அரசின் ஒருதலைப்பட்சத் தீர்மானம் சர்வதேச மட்டத்தில் எதிர் பார்த்ததை விடக் கடுமையான கண்டனத்துக்கும், அதிருப்திக்கும், விசனத்துக்கும் உள்ளாகியிருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷ அரசின் போரியல் தீவிரப் போக்குக்கு முண்டு கொடுத்து உதவும் பாகிஸ்தான், சீனா, ஈரான் போன்ற நாடுகள் மௌனம் சாதிக்க, பெரும்பாலும் ஏனைய சர்வதேச உலகம் முழுவதும், இலங்கை அரசின் தீர்மானத்தைக் குறை கூறியிருக்கின்றன.

இலங்கை அரசின் மனித உரிமை மீறல் குறைபாடுகளைக் கவனிக்காமல் அதற்குத் தொடர்ந்து உதவிகளை வழங்கி வருவோம் என இலங்கைக்கு அதிகளவில் உதவிகளை வழங்கும் ஜப்பான் முன்னர் கூறியிருந்தது. அந்த நாடு கூட இப்போது யுத்த நிறுத்த உடன்பாட்டை முறித்துக்கொள்ளும் இலங்கை அரசின் தீர்மானத்தை ஆட்சேபித்திருக்கின்றது.

தவிரவும் ஐ.நா., அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகியவையும் கடும் அதிருப்தி தெரிவித்திருக்கின்றன.

மேலும், இலங்கையில் இதுவரை காலமும் யுத்த நிறுத்தப் பணிகளைக் கண்காணித்த நோர்ட்டிக் நாடுகள் சார்பில், ஸ்கண்டிநேவியன் குழுமத்தில் அங்கம் வகிக்கும் டென்மார்க், சுவீடன், நோர்வே, ஐஸ்லாந்து, பின்லாந்து ஆகிய ஐந்து நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் கூட்டுச் சேர்ந்து இலங்கையின் முடிவை விமர்சித்திருக்கின்றார்கள்.

இதைவிடவும், இருபத்தியைந்துக்கும் அதிகமான ஐரோப்பிய நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியமும் இப்போது இலங்கை அரசின் விவேகமற்ற தீர்மானம் குறித்து ஆழ்ந்த கவலையும், கடும் அதிருப்தியும் வெளியிட்டிருக்கின்றது.

இவற்றை ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இலங்கை அரசின் இந்தக் குறுகிய நோக்குக்கொண்ட தீர்மானத்துக்கு எதிராக உலகளாவிய ரீதியில் கருத்து நிலைப்பாடு உருவாகி வருவதை உணர முடியும்.

ஆனால், போர்த்தீவிரத்தில் துடிக்கும் மஹிந்தவின் அரசுக்கு இந்த சர்வதேசக் கருத்தியல் நிலைப்பாடு குறித்துக் கவலை ஏதும் இல்லை என்பதுதான் விசனத் துக்கும் வேதனைக்குமுரிய விடயமாகும்.

இலங்கையில் மனிதநேய, மனித உரிமை விவகாரங்கள் உட்பட்ட நாட்டின் நிலைவரம் ஏற்கனவே மோசமடைந்திருப்பதைச் சுட்டிக்காட்டியிருக்கும் ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை அரசின் தற்போதைய இராணுவத் தீவிரத்தினால் நிலைமை இன்னும் மிகமிக மோசமாகப் போகின்றது என அச்சம் வெளியிட்டிருக்கின்றது.

யுத்த நிறுத்த உடன்பாடு இல்லாமல் போனதால், இப்பிணக்குக்கு பேச்சு மூலமான - நிரந்தர - அமைதித் தீர்வுக்கான வாய்ப்பு குறுகி, விலகிப்போயுள்ளது என் றும் அது தெரிவித்திருப்பது கவனிக்கத்தக்கது.

இந்தச் சிக்கலில் இருந்து விடுபட்டு, நிலைமையை முன்னேற்றமடையச் செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை ஒன்றை எடுக்கவும் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழிகாட்டி, ஆலோசனை கூறியிருக்கின்றது. ஆனால் அந்த உபதேசம் யுத்தச் சூட்டில் கொதித்து நிற்கும் கொழும்பு அரசின் காதுகளில் ஏறுமா என்பதே கேள்வி.

*"போரியல் தீவிரப் போக்கைக் கைவிட்டு இயன்ற விரைவில் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க வேண்டும். அப்படிப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க அடித்தளத்தை இடுவதாயின், பேச்சுக்கு வழிசெய்யும் அதிகாரப் பகிர்வுத்திட்டம் ஒன்றை இலங்கை அரசு விரைந்து முன்வைக்கவேண்டும். முன்னர் பிரேரிக்கப்பட்ட தீர்வுத் திட்டங்களை விட மேம்பட்டதான - குறிப்பிடத்தக்களவு அதிகாரப் பகிர்வுடன் கூடியதான - தீர்வுத்திட்டம் முன்னெடுக்கப்படுவது மிக அவசியம்.'*- என்ற சாரப்பட ஐரோப்பிய ஒன்றியத் தலைமை வலியுறுத்தியிருக்கின்றது.

இந்த ஆலோசனையில் இரண்டு விடயங்கள் கவனிக்கத்தக்கவை.

ஒன்று - முன்னர் பிரேரிக்கப்பட்டவற்றை விட மேம்பட்டதான அதிகாரப் பகிர்வுத் திட்டம் அவசியம்.

அடுத்தது - இயன்ற விரைவில் அது முன்வைக்கப்படவேண்டும்.

ஆனால் இந்த இரண்டையுமே கொழும்பு அரசு கவனிக்காது, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆலோசனையைக் காதில் வாங்கிக்கொள்ளாது என்பதை உறுதியாகக் கூறலாம்.

ஏற்கனவே முன்மொழியப்பட்ட சமஷ்டி, வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபைத் தீர்வு போன்றவற்றையெல்லாம் நிராகரித்து, 'கழுதை தேய்ந்து கட்டெறும்பானது' என்பது போல மாவட்ட சபைகளுக்கும், கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் அதிகாரத்தைப் பகிர்வது குறித்து மஹிந்தரின் சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழு அரற்றிக் கொண்டிருக்கின்றது.

கிளிநொச்சியைக் கைப்பற்றினால் மாவட்ட சபைக்குப் பதிலாக நகரசபைக்கும், அதையும் தாண்டி முல்லைத்தீவையும் பிடித்தால் நகரசபைக்குப் பதிலாக கிராம சபைக்கும் அதிகாரத்தைப் பகிர்வது பற்றி ஆலோசிக்கலாம் என்ற மேலாண்மைச் சிந்தனைப் போக்கிலேயே மஹிந்தரின் அரசு மூழ்கிக் கிடக்கின்றது.

அதேசமயம், அதிகாரப் பகிர்வுக்கான தமது திட்டத்தை இதோ வெளியிடுகிறோம், அதோ வெளியிடுகிறோம் என்று கூறிக் கூறியே கடந்த இரண்டு வருட காலத்தை இழுத்தடித்துவிட்ட இந்த அரசு, எந்தத் திட்டத்தையும் விரைவில் அறிவிக்கும் என்று நம்புவதற்கும் இடமேயில்லை என்பதும் யதார்த்தம்.

ஆகவே முன்பு முன்வைக்கப்பட்டவற்றை விட மேம்பட்ட அதிகாரப் பகிர்வுத் தீர்வை, விரைந்து வெளியிடுமாறு இலங்கை அரசுக்கு, ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ள ஆலோசனை புறக்குடத்து நீராக வீணாகும்; கொழும்பினால் அந்த வழிகாட்டல் உதாசீனப்படுத்தப்படும் என்பதை உறுதியாகக் கூறலாம்.



சிவத்தமிழ்ச்செல்வியின் பிறந்தநாள் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் எ[illegible]லிங்கன், வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிரு படங்களிலும், ஆசியுரை வழங்கிய எஸ்.கணேசராச சர்மா, தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய பிரதமகுரு அகிலேஸ்வரக் குருக்கள் ஆகியோரும் யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.சிவராணி, விழா நாயகி, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமஸ்சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர், பல்கலைக்கழக துணைவேந்தர், வைத்திய கலாநிதி த.பேரானந்தராசா, ஆறு.திருமுருகன் ஆகியோர் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் விழாவில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள்: தேசன்)

## சிவத்தமிழ்ச்செல்வியின் பிறந்ததின நிகழ்வு அறக்கொடை வழங்கலுடன் இடம்பெற்றது

வலி.வடக்கு,ஜன.9

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 83ஆவது பிறந்த தாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய யாத்திரிகர் மண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றன.

சமயப் பெரியார்கள், அறிஞர் பெருமக்கள் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டு துர்க்கா துரந்தரிக்கு வாழ்த்துக்களைக் கூறினர். பிறந்தநாள் விழாவில் பல்வேறு அறப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடந்த அறக்கொடை வழங்கும் நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் அறக்கொடை தொடர்பான அறிமுக உரையையும் வரவேற்புரையையும் நிகழ்த்தினார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், துர்க்கையம்மன் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ அகிலேஸ்வரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

அறக்கொடை பெற்றவர்கள் சார்பில் வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பதில் உரையாற்றினார். யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் வாழ்த்துரை வழங்கினார்.

சிவத்தமிழ்ச் செல்விதங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்ததினத்தை ஒட்டிப் பலரும் அன்னைக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தனர்.

பிறந்தநாள் அறக்கொடை நிதியாக வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் சிரேஷ்ட வகுப்பைச் சேர்ந்த 125 மாணவர்களுக்கான கல்விக் கொடையாக 2 லட்சத்து 50ஆயிரம் ரூபா வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனிடமும் -

• தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்கு உபகரணங்கள்கொள்வனவு அறக்கொடையாக 50ஆயிரம் ரூபா வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.சிவராணியிடமும் -

யாழ்.போதனா வைத்தியசாலையின் இருதய நோய்ப்பிரிவிற்கு அறக்கொடையாக ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய நிபுணர் த.பேரானந்தராசாவிடமும்-கையளிக்கப்பட்டன.

(1-2-68-202)

### இப்படியும் பதற்றம்

யாழ்ப்பாணம்,ஜன.9

இரவு முழுவதும் நாய்கள் தொடர்ச்சியாக குரைத்ததால் குறிப்பிட்ட பகுதி மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவைப் பதற்றத்துடன் கழிக்க நேர்ந்தது.

மறுநாள் காலை வெளியே வந்த மக்கள் பன்றிகளால் பல இடங்களில் சேதங்கள் விளைவிக்கப்பட்டிருந்ததைக் கண்டனர்.

பனம்பாத்திகள், மரவள்ளித் தோட்டம் ஆகியவற்றை பன்றிகள் துவம்சம் செய்திருந்தது கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு பிரிவு மக்களுக்கே இந்த அனுபவம் கிடைத்தது. (203-1-207)

## காரைநகரில் அமைக்கப்படும் புனர்வாழ்வு நிலையத்தை விரைவாகத் திறக்குமாறு செஞ்சிலுவை கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.9

குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றங்களில் சரணடைந்தவர்களைத் தங்கவைப்பதற்கெனக் காரைநகரில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையத்தை விரைவாகத் திறப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசத்துக் குழு நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரும் புனர்வாழ்வு ஆணையாளருமான சுகத் கம்லத்திடம் கோரியுள்ளது.

குடாநாட்டில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நீதிமன்றங்களில் சரணடைவோர் யாழ்.சிறைச்சாலையில் நீதிமன்றின் பாதுகாப்பில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலையில் பல்வேறு அசௌகரியங்களை அவர்கள் எதிர்கொள்வதால் அவர்களைத் தங்கவைப்பதற்கெனக் காரைநகரில் புனர்வாழ்வு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சரணடைவோரின் நலனைக் கருத்தில்கொண்டு இந்தப் புனர்வாழ்வு நிலையத்தை விரைவில் அமைக்கவேண் டும் என செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு புனர்வாழ்வு ஆணையாளரிடம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா, யாழ். அரச அதிபர் கே.கணேஸ் ஆகியோருக்கு அனுப்பிவைத்து மேற்படி வேலைத்திட்டத்தை விரைவுபடுத்துமாறு கோரியுள்ளது. (202)

## கொட்டடி குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களை இனங்காண உதவுமாறு பொலிஸார் கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஜன.9

யாழ்ப்பாணம் கொட்டடியில் கடற்கரை ஓரமாக உள்ள சோளபுரம் குடியிருப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தின்போது உயிரிழந்தவர்களின் சடலங்களை இனங்காண உதவுமாறு யாழ்.பொலிஸார் அவர்களது உறவினர்களிடம் கேட்டுள்ளனர்.

இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவத்தின்போது உயிரிழந்தவர்களில் ஒருவரின் தேசிய அடையாள அட்டையை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின்படி குறிப்பிட்டவரின் சடலத்தை இனங்காணுமாறு பொலிஸார் உறவி னர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குறிப்பிட்ட அடையாள அட்டையில் அருந்தவராஜா பிரபாகரன், 341, பாரதி நகர், யோகபுரம், துணுக்காய், அ.அ.இல. 821322405V, பிறந்த திகதி 1982.05.11 போன்ற விவரங்கள் உள்ளன எனவும் - மற்றையவரின் விவரம் எதுவும் தெரியவரவில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தின்போது உயிரிழந்தவர்களில் ஒருவரின் சடலம் சிதைவடைந்த நிலையிலும் மற்றையவரின் சடலம் இனங்காணக்கூடிய வகையிலும் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (203)

### நாளை

| | |
|---|---|
| மார்கழி - 25 | வியாழக்கிழமை 10.01.2008 |
| நட்சத்திரம் : | திருவோணம் பின்னிரவு : 01.40 |
| திதி : துதியை | மு.இ : 06.51 |
| சுபநேரம் : | 08.03-09.33 |
| ராகுகாலம் : | 02.03-03.33 |

### தமிழ் வாழும் வரை "வரதர்" பேரும் வாழும்!




நினைவினிக்கும் "மறுமலர்ச்சி" இதழாய் நின்றார்
நெடுநாள் வசனகவி நேராய்ச் செய்தார்
கனித் தமிழிற் கவிவாணர் கனம்பெற் றோங்கக்
கவியோடு "தேன்மொழி"யைக் களத்தில் வைத்தார்
மனுக்குலத்தின் மாட்சியினைக் கதையிற் கொண்டார்
மாசிகை "ஆனந்தன்" பின் "புதினம்" தந்தார்
தனி"அறிவுக் களஞ்சிய" த்தைத் தனயர்க் கீந்தார்
தமிழ்வாழும் வரை "வரதர்" பேரும் வாழும்.

-சிற்பி

(மூத்த எழுத்தாளர், பத்திரிகையாளர், பதிப்பாளர் வரதரின் முதலாவது ஆண்டு நினைவுநாள் இன்றாகும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறைத் தலைவர்
**கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்**
அவர்கள் தேசிய விஞ்ஞானம் மற்றும் நுட்ப ஆணைக்குழுவினால் இளம் விஞ்ஞானி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.
வாழ்க வளமுடன்
வளர்க நும் சேவை
நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயபரிபாலன சபை,
நெல்லியடி சனசமூக நிலையம்,
நெல்லியடி காமக்காரர் அமைப்பு,
நெல்லியடி கிராம அபிவிருத்திச் சங்கம்.
(சி/55103)

## ஞானோதயா அக்கடமி
கண்டி வீதி, சாவகச்சேரி

**A/L DAY CLASS**
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்:
10.01.2008 வியாழன்
நேரம்: 9.00 மணி
வழமையான ஆசிரியர் குழாம்.
A/L 2010 ஆரம்பமாகிவிட்டது.
(சி/55096) நிர்வாகம்.

## PERSONAL CLASS- MATHS
வீடுகளுக்கு அல்லது விடுதிகளுக்கு வந்து தனியாக அல்லது குழுக்களாக ஆண்டு 9, 10,O/L மாணவர்களுக்கு கணிதம் (Tamil Medium) அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
T.P.No.: 0776511686.
53, TEMPLE ROAD, JAFFNA.
(69926)

## மணி விழா நாயகனை மனதார வாழ்த்துகிறோம்.



உயர்திரு .
**வே. தி.செல்வரத்தினம்**
(யாழ். மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளரும், யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளரும்)
என்றும் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.
(69928)

## விற்பனைக்கு
பாடசாலைக்குரிய அப்பியாசக் கொப்பிகள், எழுது கருவிகள், காகிதாதிகள் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!
மிகவும் குறைந்த விலையில் **தீபம் கலண்டர்** விற்பனையாகின்றது. 150/= மட்டுமே.
**பேப்பர் ஹவுஸ்**
**300, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
(69927)

# தேடுதல் தீவிரம்
சுழிபுரம், ஜன.9

சுழிபுரம் பிரதேசத்தில் பனிப்புலம், காலையடிப் பகுதிகளில் தேடுதல் நடவடிக்கை அதிகரித்துள்ளது.

அதிகாலை வேளையில் ரோந்து செல்லும் படையினர் சுற்றிவளைப்புத் தேடுதல்களையும் நடத்தி வருகின்றனர். (202-29)

## மின்பிறப்பாக்கி அறை அமைப்பதால் நோயாளர்களுக்குச் சிரமம்
சங்கானை, ஜன.9

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் நோயாளர் விடுதிகளுக்கு அண்மையில் மின்பிறப்பாக்கி வைப்பதற்கான கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது.

வெளிநோயாளர்களுக்கான பழைய கட்டடம் மற்றும் ஆண்கள் விடுதிக்கு அண்மையாக இந்தக்கட்டடம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதனால் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (202)

## கண்ணீர் அஞ்சலி
"உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
யோ.11:25



இறைவழிப் பயணத்தில் ஆக்கமும் ஊக்கமும் அளித்து எம்மை வழி நடத்திய
**அருள் தந்தை சா.பி.கிருபானந்தன்**
அடிகளாரின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். இவரது ஆன்மா இறைபாதம் அமர்ந்திட இறைவனை இறைஞ்சுகின்றோம்.
**கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சிக் குடும்பத்தினர்.**
(69929)

## வேலை வாய்ப்பு
A/L பரீட்சை முடிவுகள் வெளிவந்து விட்டதல்லவா!
முடிவுகள் திருப்தியளிக்கவில்லையா?
கவலையை விடுங்கள்
செலிங்கோ லைப் யாழ்.கிளை உங்களை அரவணைக்கிறது.





### பதவிகள்
1. விற்பனை ஆலோசகர் (Sales Consultant)
2. விற்பனை நிறைவேற்று அதிகாரி (Sales Executive)

### சலுகைகள்:
- கவர்ச்சிகரமான ஊதியம்
- வாகனக் கடன் வசதி
- இலவசக் காப்புறுதி
- வெளிநாட்டு சுற்றுலா வாய்ப்புகள்
- Lap Top வசதிகள்

Not: எல்லா பிரதேசங்களில் இருந்தும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுகின்றனர்.
(சி/551008)
நேர்முகத் தேர்வு: 12.01.2008 நேரம்: 9.30am
தொடர்பு: 0212225061, 021222 8488
இடம்: (செலான் வங்கி மேல்மாடி), 560, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மருத்துவ முகாம்
யாழ்ப்பாணம், ஜன.9

'சொன்ட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் கச்சாய்ப் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் ஒன்றைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தினர்.

கச்சாய் அ.த.க. பாடசாலையில் நடத்தப்பட்ட இம் முகாமில் 200 இற்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கண் பரிசோதனையில் கலந்து கொண்ட 126 பேரில் 12 பேருக்கு விழி வெண்படலத்தில் பூப்படர்வு (கற்றாக்) ஏற்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் பார்வையில் குறைபாடு காணப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 80 பேருக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் அப் பகுதியைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கியதாகவும் கழகச் செயலாளர் லயன்ஸ் கா. இராசதுரை தெரிவித்தார். (202-207)

## மரண அறிவித்தல்
### திருமதி தியாகராசா தவமணி



சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராசா தவமணி (08.01.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா தியாகராசா (ஆசிரியர், விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- பறுவதம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சின்னையா -அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் அருள்மாறன் (நோர்வே), அருள்நிதி (சுவிஸ்), வேல்மாறன் (சுவிஸ்), வேல்நிதி, சுதாநிதி, சுதாமாறன் (விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்)ஆகியோரின் பாசமிகு தாயும் ஞானச்செல்வி (நோர்வே), தயாபரன் (சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்), கணேசலிங்கம் (ஆசிரியர், யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்), குமரேசன் (வேலைகள் மேற்பார்வையாளர், பராமரிப்புப்பகுதி, யாழ்.பல்கலைக்கழகம்), கௌரி ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, தம்பிராசா, இராசதுரை மற்றும் சிவஞானம் (J.P.- வவுனியா), திருமதி யோகலட்சுமி திருச்செல்வம் (கொழும்பு), பாலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான சத்தியமூர்த்தி, சோதிநாதன் மற்றும் கனகநாயகம் (கொழும்பு), தயாபரசிவம் (ஓய்வூதியர்), திருமதி ஜெகநாதன் அன்னரத்தினம், வைகுந்தவாசன் (கொழும்பு), திருமதி சிவபாக்கியநாதன் திலகவதியார் (J/175 கிராம அலுவலர்), வள்ளுவதாசன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மைத்துனியும் அருச்சுனன், அபிஷன், அயிலவன், ஜான்சி, ஜஸ்மி, தாரணி, அபிநயா, அபிராம், கஜேந்திரன், கஜானி, அபிராமி, குமுதினி, குலேந்திரன், துளசிகா, யசோதினி, யசோதரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2008) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தியாகராசா சுதாமாறன்,
பண்ணாகம், சுழிபுரம்.
(69932)

## ஆரம்ப அழைப்பு
எமது வாடிக்கையாளர்கள்!
அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது இனிய புதுவருட,
பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

இன்று (09.01.2008) சர்வசித்து வருடம் மார்கழி மாதம் புதன்கிழமை முற்பகல் 10 மணி 45 நிமிடம் தொடக்கம் 12 மணிக்குள் வரும் சுபவேளையில் எமது நிறுவனம் மீண்டும் ஆரம்பமாகின்றது என்பதை தெரிவிப்பதில் பெருமிதம் அடைகின்றோம்.

**உங்கள் அன்பான ஆசியுடன் நாம் வளர்வோம்.**

**நிஷானந்தா ஜுவெல்லறி**
**75, (121) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
Phone No: 021- 2227985
(இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)
நன்றி
**நிர்வாகம், உரிமையாளரும், ஊழியர்களும்.**
(69779)

## நாய்களுக்குத் தடுப்பூசி
யாழ்ப்பாணம், ஜன.9

சுகாதார சேவைத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வலி.தெற்குப் பிரதேச சபையின் அனுசரணையுடன் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்புநாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இணுவில், உடுவில், சுன்னாகம், ஏழாலை, புன்னாலைக்கட்டுவன் ஆகிய பகுதிகளில் எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை தடுப்பூசி ஏற்பட்டு நாய்களுக்கான உரிமத் தகடும் வழங்கப் [illegible] (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரனை அழிக்க நினைத்தோரை நிலைகுலையச் செய்த போராளி சாள்ஸ்

## புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர்

கிளிநொச்சி,ஜன.9

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கொலை செய்து தேசிய விடுதலைப் போராட்டத்தை அழிப்பதற்குத் திட்டம் தீட்டிய, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் அரசை தலைநகர் கொழும்பிலேயே செயற்பட முடியாதபடி நாம் அப்போது பாடம் கற்பித்தோம். அதனைச் செய்துகாட்டியவர் கேணல் சாள்ஸ்.

- இவ்வாறு விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் ச.பொட்டு அம்மன் சாள்ஸுக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

மன்னாரில் கடந்த சனியன்று படையினரின் கிளைமோர்த் தாக்குதல் ஒன்றில் களப்பலியான கேணல் சாள்ஸின் இறுதி வீரவணக்க நிகழ்வு நேற்றுக் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல வெற்றிகரமான தாக்குதல்களை நடத்தியவர் கேணல் சாள்ஸ்.

தமிழீழ வரலாற்றில் சாள்ஸ் நினைவு கூரப்படுவார். புலனாய்வுத்துறையின் தாங்கும் சக்தியாக ஒரு மாவீரனாகக் கேணல் சாள்ஸைப் பார்க்கின்றேன். போர்க் களங்களில் தன்னை ஆகுதியாக்க கேணல் சாள்ஸ் பல தடவை முன்னின்றுள்ளார்.

போர்க் களத்தின் வெளியே நின்று போர்க்களத்தின் அழுத்தத்தின் சக்தியாக நின்று உழைத்த அந்த அழைப்பின் சக்தியாக நின்ற சாள்ஸை நாம் என்றென்றும் நினைவு கூரவேண்டும்.

சாள்ஸின் ஆளுமை என்பது வரலாற்றில் பெரும் வெற்றியாக அமைந்த கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதலைக் குறிப்பிடலாம். அங்கு நம்மால் செய்ய முடியாத வெற்றிகளை எமது போராளிகள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் - இதை விடப் பெரியது இருக்கு. அதை நம்பிக்கையுடன் செய்வோம் என்றும் சாள்ஸ் எமக்கு நம்பிக்கையூட்டியவர்.

சாள்ஸ் இன்று எம்மைவிட்டு மறைந்து விட்டார். தமிழீழத்திற்கான வரலாற்றிலே, சாள்ஸ் எவ்வாறு நினைவு கூரப்படுவார். அல்லது எவ்வாறு நினைவு கூரப்படுவதற்கு பொருத்தமானவனாவார். தமிழீழம் எவ்வாறு அவனை நினைவு கொள்ளும் என்ற எண்ணம் - கேள்வி என்முன்னே எழுந்து நிற்கிறது.

இந்த நேரத்தில் எனக்கு ஒரு போரியல் அறிஞனின் மேற்கோள் நினைவுக்கு வருகின்றது. "சாவைச் சந்திக்க, போர்க்களத்தின் முன்னிலையில் நிற்பவர்கள் மட்டும் அல்ல வீரர்கள். போர்க்களத்தின் பின்னே நின்று, அந்தப் போர்க்களத்தின் அழுத்தத்தைச் சுமப்பவர்களும் வீரர்களே."

இந்தப் புலனாய்வு நகர்வுகளின் அழுத்தங்களின் தாங்கு சக்தியாக நின்ற ஒரு மாவீரனாக நான் சாள்ஸைப் பார்க்கின்றேன்.

ஆனால், அதற்கும் மேலாக அந்த போர்க்களத்திற்கு மேலாக நின்று போர்க்கள அழுத்தத்தின் தாங்கு சக்தியாக நின்று அதற்காக உழைத்த உழைப்பினால் அவர் நினைவுகூரப்படவேண்டும் என்று நான் விரும்புகின்றேன். - என்றார். (சி)

# முள்ளிக்குளத்தில் விமானத் தாக்குதல்

கொழும்பு,ஜன.9

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பாலம்பிட்டி மற்றும் முள்ளிக்குளம் பகுதிகளில் இலங்கை விமானப்படையின் 'மிக்' விமானங்கள் நேற்றுக்காலை 9.30 மணியளவில் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளன.

விடுதலைப் புலிகளின் அப்பகுதிக் கட்டளை மையத்தை இலக்குவைத்தே இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும், தாக்குதலில் அந்தத் தளம் முற்றாக அழிக்கப்பட்டது என்றும் படைத்தரப்புத் தெரிவித்துள்ளது. (சி)

## வருடத்தின் முதலாவது நாடாளுமன்ற அமர்வின்போது

# ஆசனங்களில் இருந்து பாய்ந்து சென்று மோத முற்பட்ட டக்ளஸும் கஜேந்திரனும்!

கொழும்பு,ஜன.9

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அவசரகாலச்சட்டத்தை நீடிக்கும் பிரேரணை மீதான விவாதத்தின் போது-

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த செல்வராஜா கஜேந்திரனும் முஷ்டிகளை முறுக்கிக்கொண்டு ஒருவரை ஒருவர் தாக்குவதற்கு தத்தமது ஆசனங்களில் இருந்து பாய்ந்தனர்.

எனினும் அவர்கள் மோதிக் கொள்ளாமல் அரச, எதிர்க்கட்சி எம்பிக்கள் தடுத்து விட்டனர்.

நாடாளுமன்றம் இந்த(2008ஆம்) ஆண்டு முதன் முதலாகக் கூடியபோது இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்றது.

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை மீதான விவாதம் இடம்பெற்ற போதே இச் சம்பவம் இடம்பெற்றது.

சபை நிகழ்வுகளுக்கு தலைமை தாங்கிக் கொண்டிருந்த பிரதி சபாநாயகர் கீதாஞ்சன குணவர்தன தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் அரியநேத்திரனைப் பேசும்படி அழைத்தார்.

அரியநேத்திரன் தனது உரையின் ஆரம்பத்திலேயே மகேஸ்வரனின் படுகொலையை வன்மையாகக் கண்டித்தார்.

அவ்வேளையில் சபையில் இருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா "உங்களுடைய புலிகள்தானே மகேஸ்வரனைக் கொன்றனர். அவர்களைப் போய்க் கேளுங் கள்" - என்றார்.

அமைச்சரின் இக்கூற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனுக்கு கொதிப்பை ஏற்படுத்தி விட்டது.

டக்ளஸ் தேவானந்தாவைப் பார்த்து, "நீ தான்டா கொலைகாரன்; மகேஸ்வரனைக் கொலை செய்தது உன்னுடைய ஆட்கள் தான்" - என்று சத்தமிட்டார் கஜேந்திரன்.

இதனால் இருவருக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது. அமைச்சரும் கஜேந்திரனும் ஏக வசனத்தில் சரமாரியாகப் பேசிக்கொண்டனர்.

இவர்களுடைய தர்க்கம் முற்றி இருவருமே முஷ்டியை முறுக்கிக் கொண்டு ஒருவரை ஒருவர் தாக்குவதுபோல் ஆசனங்களில் இருந்து பாய்ந்தனர்.

கஜேந்திரன் எம்.பி. தனது ஆசனத்தில் இருந்து எழுந்து டக்ளஸ் தேவானந்தாவை நோக்கிப் பாய்ந்தார்.

அதேவேளை அமைச்சர் டக்ளஸும் பாய்ந்துவந்தார்.

**அமைச்சர் சபை நடுவே நின்று சவால்**

ஆனால் ஸ்ரீகாந்தா எம்.பி. கஜேந்திரனை சபை நடுவே செல்ல விடாது மறித்துப் பிடித்துக்கொண்டார். எனினும் அமைச்சர் டக்ளஸை மறித்துப் பிடிக்க எவரும் இல்லை.

இதனால் சபை நடுவே நின்று கொண்டு "அடே மடையா! தைரியம் இருந்தால் இறங்கி வாடா!" என்று கஜேந்திரனைப் பார்த்து சவால் விடுத்தார் அமைச்சர் டக்ளஸ்.

இந்நிலையில் இருவரும் மேலும் மேலும் ஆக்ரோஷமாகப் பேசிக்கொண்டனர். அப்போது அமைச்சர் தினேஷ் குணவர்தன விரைந்து வந்து சபை நடுவில் நின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை பலவந்தமாக அழைத்துச்சென்று ஆசனத்தில் அமரச் செய்தார்.

இந்தச் சூடு தணியும் போது ஐ.தே.க. உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அமைச்சர் டக்ளஸின் செய்கையைக் கண்டித்தார்.

"ஒரு பொறுப்புள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மிகவும் மட்டரகமாக நடந்து கொள்கின்றார். உறுப்பினர் ஒருவரைத் தாக்குவதற்காக சபை நடுவில் நின்று சவால் விடுகின்றார். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

"மகேஸ்வரன் எம்.பியைக் கொலை செய்த நபர் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் பணி புரிந்தவர் என்று பாதுகாப்புப் பேச்சாளரான அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளார். இதற்கு டக்ளஸின் பதில் என்ன?" - என்று கேள்வி எழுப்பினார் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ. (அ-சி)




நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் சிக்கிய அமைச்சர் தஸநாயக்கா பயணித்த வாகனத்தைப் படத்தில் காணலாம்.

# மனிதப் பேரவலத்தின் மத்தியிலும் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள்

## நன்றி தெரிவித்து மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.9

குடாநாட்டில் மனிதப் பேரவலத்தினை சந்தித்த போதிலும், ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற உழைத்த அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

தமிழ மாணவர் ஒன்றியத்தின் யாழ். மாவட்டப் பிரிவினர் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. அதில் மாணவர்களாகிய நாம் அரசு எதிர்பார்த்த தோல்வியினை அடையாது தடுத்திருக்கின்றோம். அரசு எதிர்பார்க்கும் கல்வி ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தின் வெற்றியாகவே தமிழ் மாணவர்களாகிய எமது கல்வி ரீதியிலான சாதனைகள் அமைகின்றன.

அதன் அடிப்படையில் இக்காலகட்டம் அரசின் மோசமான வன்முறைகளுக்கு மத்தியிலேயே தமிழர் தாயகம் எங்கும் மாணவர்கள் கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர். பல சவால்களுக்கும் மத்தியில் பரீட்சைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். எனினும் தமிழ் மாணவர்கள் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நாம் நிரூபிக்கத் தவறவில்லை. அரசு போடும் தடைகள் எல்லாம் தாண்டிப் பறந்து செல்ல முயற்சிக்கின்றோம்.

எமது சக மாணவர்கள் பாதிக்கப்படுகின்றபோது மாணவர்கள் ஆகிய நாம் அரசுக்கும் படைகளுக்கும் எதிராக போராட்டங்களில் குதிக்க வேண்டியிருந்தது. இந்நிலையில் கல்வி ஒடுக்குமுறைக்கு எதிரான பாய்ச்சலாகவே நாம் பரீட்சைக்கு தோற்றினோம். அதன் மூலம் அரசு எதிர்பார்த்த பெரும் வெற்றியை ஈட்டவிடாது தடுத்திருகிறோம். எதிர்காலத்தில் மிகுந்த முயற்சியோடு சாதனைகளின் எல்லைகளைத் தொட மாணவராகிய நாம் முடிவெடுத்து கற்க வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் உறுதி எடுத்துக்கொள்வோம்.

உளத்தாக்கங்களுக்கு உட்பட்டவேளை மாணவர் ஆகிய எமக்கு உறு துணையாகவும் உந்துசக்தியாகவும் இருந்த ஆசிரியத் தெய்வங்களுக்கும், கல்விமான்களுக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். - என்றுள்ளது.

### ஐ.தே.கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு ஒன்று கூடிய அரச உயர்மட்டம் இத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது எனவும் அவர் மேலும் சொன்னார்.

மகேஸ்வரனின் கொலை தொடர்பாக நேற்று ஐ.தே.கட்சி சபையில் எதிர்ப்புத் தெரிவித்து சர்ச்சையைக் கிளப்பியபோதே அதன் நடுவே அவர் இதனைத் தெரிவித்தார். (அ-சி)

# பூநகரியில் ஞாயிறன்று ஷெல் வீச்சு மாட்டுவண்டியில் சென்ற இருவர் பலி!

கிளிநொச்சி,ஜன.9

பூநகரியில் மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கப் படையினர் நடத்திய எறிகணை வீச்சில் பொதுமக்கள் இருவர் பலியானார்கள்.

மக்கள் குடியிருப்புக்களை இலக்கு வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6.40 மணியளவில் சிறிலங்காப் படையினர் எறிகணை வீச்சுத்தாக்குதலை நடத்தினர்.

இதில் மூன்று பிள்ளைகளின் தந்தையான துரைசாமி தெய்வேந்திரம் (வயது 37) மற்றும் மார்கண்டு பாலசிங்கம் (வயது 67) ஆகிய இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலின் போது மக்கள் குடியிருப்புக்கள் சிலவும் சேதமடைந்ததுடன் கொல்லப்பட்ட இருவரும் சென்ற மாட்டு வண்டி பலத்த சேதத்துக்குள்ளாகியதுடன் மாடு ஒன்றும் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. (அ)

### கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற பகுதிக்கு விரைந்த பொலிஸாரும் படையினரும் வீதியைத் தடை செய்து சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.

"லேக்ஹவுஸ் சுற்று வட்டத்துக்கு எதிரே உள்ள வர்த்தக நிறுவனங்கள் அமைந்த தொடர் மாடிகளுக்குச் சமீபமாக உள்ள தொலைபேசி கூண்டுக்கு உள்ளேயே இக்குண்டு வைக்கப்பட்டிருந்தது. இது நிச்சயமாக புலிகளின் வேலையே" என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக நிலையப் பணிப்பாளர் நாயகம் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

தென்பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ள இந்த இரண்டாவது குண்டுவெடிப்புச் சம்பவம் தலைநகரில் பெரும் பதற்ற நிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. (அ-2-சி)

### அவசரகாலநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக 15 வாக்குகளும் கிடைத்தன.

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் எம்.பிக்கள், அரசுத் தரப்புடன் சேர்ந்து பிரேரணையை ஆதரித்து வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் எதிர்த்து வாக்களித்தனர்.

இ.தொ.கா., மலைய மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் உறுப்பினர்கள் வாக்களிப்பு சமயம் சபையில் இருக்கவில்லை. ஐ.தே.கட்சியின் எம்.பிக்கள் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேஸ்வரன் கொலைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், பிரதி அமைச்சர் சரத்குமார குணரட்ணவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் இடைநடுவில் வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொண்டனர்.

நாடாளுமன்றில் 2008ஆம் ஆண்டின் முதலாவது கூட்டத்தொடர் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் ஆரம்பமானது.

ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரனின் படுகொலையால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு முஹமட் ரஜாப்தீன் சபாநாயகரின் முன் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இதனைத் தொடர்ந்து சபாநாயகர், அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரகடனத்தை வாசிக்க முற்பட்டார்.

### பதாகைகள், போஸ்டர்களுடன் எதிர்ப்புப் போராட்டம்

இவ்வேளை, எதிர்க்கட்சிக் கொரடாவும், ஐ.தே.கட்சி உறுப்பினருமான ஜோஸப் மைக்கல் பெரேரா மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரனின் படுகொலை தொடர்பாக சபையில் கவனஈர்ப்புப் பிரேரணை ஒன்றை முன்வைக்க முனைந்தார்.

இதற்கு சபாநாயகர் இடமளிக்க மறுத்ததோடு, ஜனாதிபதியின் அவசரகாலப் பிரகடன அறிவிப்பின் பின் அதனை சமர்ப்பிக்க முடியும் என்று கூறினார்.

''இதனை ஏற்கமுடியாது, நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகள் 25ஆம் பிரிவின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களுக்கும் சிறப்புரிமைகளுக்கும் முன்னுரிமை வழங்கப்படவேண்டும் என்று தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது'' எனத் தெளிவுபடுத்தினார் ஜோஸப் மைக்கல் பெரேரா.

அவரின் கூற்றைப் பின்னர் சபாநாயகரும் ஏற்றுக்கொண்டார்.

இவ்வேளையில், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் கறுப்புப்பட்டிகளை அணிந்தபடி மகேஸ்வரனின் படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்கும் பதாகைகளையும், போஸ்டர்களையும் உயர்த்திப் பிடித்த வண்ணம் எழுந்து நின்று தமது கண்டனத்தைத் தெரிவித்தனர்.

* ''மஹிந்த சிந்தனை மகேஸ்ரவனைக் கொன்றுவிட்டது!''
* ''மகேஸ்வரனைக் கொலை செய்தாலும் அவரது குரல் தொடர்ந்து ஒலிக்கும்!''
* ''மகேஸ்வரனின் கொலைக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும்!''
* ''அரச முக்கியஸ்தர்களுக்கு மட்டும் தான் பிரபுக்கள் பாதுகாப்பா?''

- என அந்தப் பதாகைகளில் பொறிக்கப்பட்டிருந்தன. (சி)

# மன்னார், முகமாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயன்ற விடுதலைப் புலிகள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. இந்த மோதலின் போது 6 புலிகள் உயிரிழந்துள்ளனர் என்றும் பெரிய தம்பனைப் பகுதியில் மதியம் இடம்பெற்ற பிறிதொரு மோதலிலும் 4 புலிகள் உயிரிழந்துள்ளனர் என்றும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை யாழ்ப்பாணம் நாகர் கோவில் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலில் 2 விடுதலைப் புலிகள் உயிரிழந்துள்ளதுடன் இரு பதுங்கு குழிகளும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன என்றும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் கிளாலிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 3 விடுதலைப் புலிகள் காயமடைந்துள்ளனர் என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இம் மோதல்கள் தொடர்பாக புலிகள் தரப்பில் எவ்வித தகவல்களும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. (சி)

# ஜா-எல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்தவர்களில் மேலும் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்படுகின்றது. அவர்கள் றாகம வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள்.

அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கும் தேச நிர்மாண அமைச்சில் பல்வேறு அமைச்சர்கள் அமைச்சரவை அந்தஸ்து அற்ற நிலையில் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவரே டி.எம். திஸநாயக்கா என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் அரச படையினரால் மீட்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் புனர்வாழ்வுப் பணிகளை நேரடியாகக் கவனிக்கும் பொறுப்பாளராகச் செயற்பட்டு வந்தவர் தஸநாயக்கா. அவர் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார். (அ-உ)

# பயங்கரவாதத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தாலும் பேச்சுக்கு வர புலிகளுக்கு இன்னும் சந்தர்ப்பம் உள்ளது. இது பற்றிய இறுதித் தீர்மானம் அவர்களின் கைகளில் தான் தங்கியுள்ளது.

மகேஸ்வரனின் கொலைக்கு அரசு தனது பலத்த கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறான கொலைகளை அரசு ஒருபோதும் ஏற்காது.

வணக்கஸ்தலம் என்று கூடப் பார்க்காமல் புலிகள் கொலை நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடியவர்கள். கொலைக் கலாசாரத்தை இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் புலிகள்தான் - என்றார் (அ-சி)


யூனிவேர்சல்
(யா/இந்து மகளிர் கல்லூரி அருகே)
கலை | A/L DAY CLASS | வர்த்தகம்
ஆரம்பம் 9.1.2008 புதன் 7 a.m
A/L 2010 ஆரம்பம்

பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்
GIT (G.C.E A/L)
ICT (Grade 10,11)
Kids Programming (Year3-10)
Start on: 11,14.01.2008
Softview Computer College
55, Arasady Rd, Jaffna.

கணக்கீடு
A/L 2008
Paper class
திரு. வின்சன்
(B.B.A. Spl)
ஆரம்பம்: 10.01.08
(வியா-4.30)

CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
வார மற்றும் வார இறுதிப் பிரிவுகள்
Weekday and Weekend Batches
விஷேட சலுகைக் கட்டணங்களுடன்
இப்பிரிவுகளில் இணைய விரும்புவர்கள்
13-01-2008 க்கு முன்
பதிவுகளை மேற்கொள்ளவும்.

Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Books Premier + MYOB
வகுப்புக்கள் ஆரம்பம். Batch I: 10/01/2008
Batch II: 12/01/2008
Batch III: 13/01/2008
COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna
Branch : #167, Kasthuriyar Rd, Jaffna.
PHONE : 021-222 8250 , 0777 222 422

2007 A/L என்னிடம் படித்து சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களையும் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்

| பெயர் | பெறுபேறு | மா.நிலை |
|---|---|---|
| பிரேமினி | 3A | 03 |
| சிந்துஜா | 3A | 18 |
| கார்த்திகா | 2AB | 31 |
| ராஜ்குமார் | 2AC | 50 |
| ஞானசக்தி | A2B | 61 |
| கீர்த்திகா | A2B | 69 |
| நிசாந்தினி | A2B | 99 |

0777 - 529113

''எத்தனை பேர் படித்தார்கள் என்பது முக்கியமல்ல. எத்தனை பேர் நல்ல பெறுபேறு பெறுவதற்கு காரணமாக இருந்ததே முக்கியமானது''
A/L Day Class ஆரம்பம்: இன்று காலை 9 | A/L 2010 சனி - காலை 8
பின்வரும் இடங்களில் உங்கள் அனுமதியினைப் பெறலாம்.
BECON - யாழ்நகர்
BRAIN POWER - குருநகர்
உங்கள் அன்பு ஆசான்: பாலகஜன் (கணக்கீட்டு ஆசிரியர்)

அறிவொளி-NALLUR
BIOLOGY
Mr.அல்போன்ஸ்
A/L 07, Sat, Sun 2.30 Pm
A/L 08, Func. Animal Sat, Sun 3.30 p.m
A/L 2010, Sat, Sun 5.00 p.m

SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள் 2008
ஆரம்பம் 12,16,01.2008
Special Offer 3000/=
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 3000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE | 4 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | 4 Months |
| DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | 3 Months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | 2 Months |
| DIPLOMA IN AutoCAD | 3 Months |

Softview Computer College
55, Arasady Road, Jaffna.

Learn Everything an Accountant to Know
கணக்கீட்டுத் துறையில் புதிய பரிமாணம்
Certified Computer Accountant
A/L மாணவர்கள்,பல்கலைக்கழக மாணவர்கள், HNDA,AAT மாணவர்கள், மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுடைய அனைவருக்குமான கணக்கீட்டு மென்பொருள் கற்கை நெறி.
Tally®
The qualification for success
புத்தாண்டிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் !
2 Million users accross 90 countries
Tally Software - Accredited by The Institute of Charted Accountants of England
மேலதிக விபரங்களுக்கு
CSC Computer Education,
101,2nd Floor
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021 222 8196
AN ISO 9001 : 2000 CERTIFIED INSTITUTION

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
Nothing is Impossible
Biology Examination -2

| இல | பெயர் | புள்ளி |
|---|---|---|
| 01 | லோகேஸ்வரன் சிந்துரேகா | 83 |
| 02 | செல்வரட்ணம் ரெனிசியா | 75 |
| 03 | நித்தியானந்தராஜா கஜனி | 73 |
| 04 | கோபாலரத்தினம் சுகாந்தன் | 72 |
| 05 | குமாரசாமி ஜனனி | 70 |
| 06 | பஞ்சநாதன் நிரோசன் | 70 |
| 07 | சுப்பிரமணியம் ஜான்சி | 70 |
| 08 | கதிரமலை சிந்துயா | 69 |
| 09 | சுந்தரராசா தனுராஜ் | 68 |
| 10 | சந்திரகாந்தன் அபிராமி | 68 |

பரீட்சைக்கு தோற்றியோர் : 205
ஆசிரியர் : சு.பொன்திவாகரன்
பரீட்சை - 03
10 . 01 .2008 வியாழன் 12 : 00
வெளிமாணவர்களும் பரீட்சைக்கு தோற்றலாம்

கணக்கீடு
A/L 2008/Day Paper Class
ஆரம்பம் : நாளை 3.30 p.m
A/L 2009
சொத்து விற்பனை
ஆரம்பம் : வெள்ளி 4 p.m
A/L 2010 சனி 10 a.m
S.தவா
(B.Com(Hons(Acc Spl)
SHAMROCK
ஈச்சமோட்டை,யாழ்.

விக்னா
கல்வி நிறுவனம்
தலைமையகம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்
A/L DAY CLASS
கலைப் பிரிவு
Eco - திரு.ஆகஜீதன்-7.15
Log - திரு. கால்-7.15
Tam-திரு.அரங்கை-8.30
H/c-திரு. N.Tதன்-9.30
Geo-திரு.பாபு- 7.15
Hin-திரு.N.Tதன்-10.15
Hist-திரு.மதன்
P/sci-திரு.ரெமின்சன்-11.15
Chri-திரு.ஜெரமோன்-9.30
Drama-திரு.மதூரன்-11.15
(Mon - Fri)

தொழிற் பயிற்சிகள்
★ MOBILE PHONE REPAIRING
HARDWARE | HARDWARE REPAIRING
SOFTWARE | PHONE LOCK காலம்: 1 மாதம்
★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பெயரிங்
சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக், Monitor. UPS. Satalite Antenna திருத்தப்படும் முறைகள் ஆரம்பத்தில் இருந்து பயிற்சி அளிக்கப்படும்.
★ ஏயர் கொண்டிசனிங்
சகல குளிர்சாதனப் பெட்டிகள், ஏயர் கொண்டிசன்கள் திருத்தும் முறைகள் பயிற்சி அளிக்கப்படும்.
ஆரம்பம்: 12-01-2008 (சனி, ஞாயிறு)
14-01-2008(கிழமை நாள்கள்)
O/L படித்த இருபாலரும் அனுமதிக்கப்படுவர்.
JAFFNA TECHNICAL INSTITUTE,
இல.45 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
T.P: 0212226434, 0779254078

B.sc. (maths) B.A, B.com, BBA
கமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
* பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
* A/L இல் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.
* B.A இல் வரலாறு, அரசியல், தமிழ், ஆங்கிலம், பொருளியல், Social Science ஆகிய பாடங்களில் ஒன்றைத் தெரிவு செய்யமுடியும்.
B.com இல் வர்த்தகம், COMMERCE WITH COMPUTER APPLICATION ஆகிய பாடங்களில் ஒன்றைத் தெரிவுசெய்ய முடியும்.
* BACHELOR OF COMPUTER APPLICATION என்னும் பட்டப் படிப்பிற்குரிய கற்கை நெறியினையும் மேற்கொள்ளலாம்.
விரிவுரைகள் ஆரம்பம் :- 12.01.2008 9மணி
குறிப்பு:- இப்பட்ட நெறிகளுக்குரிய பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
யாழ் இணைப்பாளர்கள்
காமராசர் பல்கலைக்கழகம்
T.P NO 2228148, 2223208
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

விக்னா
கல்வி நிறுவனம்
தலைமையகம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்
A/L DAY CLASS
வர்த்தகப் பிரிவு
Eco-திரு.ஆகஜீதன் 7.15
Acc-திரு. காண்டீபன் 8.30-11.00
Com-திரு. அ.முரளி 10.00-11.00
(Mon - Fri)

C.C.A
சுன்னாகம்
கலை, வர்த்தகப் பிரிவுகள்
A/L Day Class
ஆரம்பம் :- 10.01.2008 8 a.m
A/L 2010 ஆரம்பம்:- 12.01.2008 9 a.m

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | :- பத்மநாதன் | விவசாயம் | :- கஜன் |
| அளவையியல் | :- சயந்தன் | ம.பொருளியல் | :- கஜந்தினி |
| நாடகம் | :- கணேஸ் | பொருளியல் | :- ரூபன் |
| இ.நாகரிகம் | :- சுரேஸ் | வணிகக்கல்வி | :- உதயமோகன் |
| புவியியல் | :- பாபு | கணக்கீடு | :- சீலன் |
| அரசியல் | :- செந்தூரன் | | |


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.01.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org